உ

கணபதி துணை.

பலபட்டடைச் சொக்கநாதபிள்ளை

இயற்றிய

# மதுரை
# மும்மணிக்கோவை.

இது

மஹாமஹோபாத்யாய — தாக்ஷிணாத்யகலாநிதி

## உ. வே. சாமிநாதையரவர்களால்

பரிசோதித்து

நூதனமாக எழுதிய குறிப்புரையுடன்

பதிப்பிக்கப்பெற்றது.

செந்தமிழ்ப்பிரசுரம்—௫௭.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

1932.

விலை அணா 5.

# முகவுரை.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

அம்பொ னாலவாய், நம்ப னார்கழல்
நம்பி வாழ்பவர், துன்பம் வீடுமே.

திருச்சிற்றம்பலம்.

மும்மணிக்கோவையென்பது தமிழ்ப்பிரபந்தவகைகளுள் ஒன்று. இஃது ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக்கலித்துறை என்பன முறையே அந்தாதியாக மண்டலித்து வர முப்பதுசெய்யுட்களால் இயற்றப் படுவது; *மூன்றுமணிகளாற் கோக்கப்பெற்ற கோவைபோல இருத்தலின் இப்பெயர் பெற்றது. மூன்றுமணிகளாவன புருடராகம், வைடூரியம், கோமேதகம் என்பனவாம்; "மும்மணியா வனசொன்ன புருடராகம், உறுவயிடூ ரியங்கோமே தகமேயென்றுங் கோதுவர்" திருவால. உரு:உஉ;

இது சொற்றொடர்நிலைச்செய்யு ளென்னும் நூல்வகையின்பாற் படும். மும்மணிமாலை யென்னும் பிரபந்தம் வேறு; இது வேறு. இந்த வகையில் தொல்லாசிரியர்கள் இயற்றியவை பல உள்ளனவென்று தெரிகின்றது. பதினோராந்திருமுறையில் மும்மணிக்கோவைகள் பல உள்ளன. அவையாவன (1) திருவாரூர்மும்மணிக்கோவை, (2) திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, (3) சிவபெருமான் திருமும்மணிக்கோவை, (4) மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை, (5) திருக்கழுமலமும்மணிக்கோவை, (6) திருவிடைமருதூர்மும்மணிக்கோவை, (7) திருஞானசம்பந்தர்மும்மணிக்கோவை என்பனவாம்.

---

* "முத்தினை ருத்தியர் **மும்மணிக்** காசினர்", "முத்த வள்ளியொடு **மும்மணி** கட்டி", "**மும்மணிக்** காசும் பன்மணித் தாலியும்" (பெருங்கதை) என்பவற்றில் மும்மணியென்பது வழங்கப்பட்டிருத்தல் காண்க.

மதுரைமும்மணிக்கோவையென்பது மதுரையிற் கோயில்கொண் டெழுந்தருளியுள்ள ஸ்ரீசோக்கநாதக்கடவுள் விஷயமாகப்பலபட்டடைச் சொக்கநாதபிள்ளையென்னும் கவிஞர்பெருமான் இயற்றியது; விநாயகர் காப்புச்செய்யுளோடு முப்பத்தொருசெய்யு ளடங்கியது.

இத்தகைய பிரபந்தங்கள் பெரும்பாலும் பாட்டுடைத்தலைவர்க ளுடைய பெருமைகளைப் புலப்படுத்திப் பலவகைச் சொல்லணி பொரு ளணிகளையும் வருணனைகளையும் பெற்றுவிளங்கும். அவ்வாறே இந் நூலும் அமைந்துள்ளது.

இப்பிரபந்தத்தில் மதுரையிலுள்ள மூர்த்தி தலம் தீர்த்தம் என்பன பலபடியாகப் பாராட்டப்பெற்றுள்ளன. ஆசிரியர், சொக்கலிங்கப்பெரு மானை மணிக்கோ, மாணிக்கக்குன்று, கூடற்பிராட்டிக்கு வாய்த்தவர், மதுரேசர், மதுரைப்பிரான், நிறைபெறக்கொடுத்தும் குறைபடாச் செல்வர், மண்ணுயிரருந்த வற்றாவருட்கடல், அறப்பயிர்காக்குந் திறப் போரேறு, மும்முலைக்கொடி படர் ஐம்முகக்குன்றம், அறுசுவைபழிக்கும் நான்மறைக்கிழங்கு, மறிகடலழைத்த மாறாப்பொன்மழை, காய்விடங் குடித்துக் கனிந்ததெள்ளமுதம், கயல்விழிக்கொம்பிற் றுயல்வரு தீங் கனி, சொக்கநாதர், சொக்கர், ஆலவாயமுதம், காலன்கூற்று, வில்வேண் மறலி, கல்விச்சொன்மலை, வெள்ளிமன்றுடைய கோ எனப் பாராட்டுவர்.

அம்பிகையை மும்முலைக்கொடி, கூடற்பிராட்டி, கயற்கட்பிராட்டி எனவும், மதுரையைத் தமிழ்க்கூடல், முத்தமிழ்க்கூடல், செந்தமிழ் தேர்கூடல், நான்மாடக்கூடல், கதம்பகானனம், கடம்பாடவி, துவாத சாந்தத்தலம், சீவன்முத்தித்தலம் எனவும் கூறுவர். இத்தலத்தி லுள்ள இந்திரவிமானம், *கபாலிமதில், தமிழ்ச்சங்கம், வெள்ளிமன்றம் என்பன இடையிடையே இந்நூலிற் கூறப்பட்டுள்ளன. பொற்றாமரைத் தீர்த்தம், வையை என்பவற்றைப்பற்றிய செய்திகளும் சொல்லப்படு கின்றன. வையையைத் தமிழறிவையை என்பர் ஆசிரியர்.

---

*மதுரைத்திருக்கோயிலிலுள்ள ஒரு மதிலின்பெயர் கபாலிமதிலென்பது தேவாரத்தாலும் சில பெரியோர்களாலும் இந்நூலாலுமே தெரியவந்தது.

இந்நூலில் ஸ்ரீசொக்கநாதக்கடவுள் இயற்றியருளிய திருவிளையாடல்கள் பலவற்றை ஆசிரியர் எடுத்தாளுகின்றார். அவை: பாண்டியன் கூன்நீக்கியது, இந்திரன்பழிதீர்த்தது, வெள்ளையானைசாபந்தீர்த்தது, யானையெய்தது, கரிக்குருவிக்கு உபதேசம்செய்தது, மண்சுமந்தது, எழுகடலழைத்தது, சுந்தரபாண்டியராகிவந்தது, கால்மாறியாடியது, பன்றிக்குட்டிக்கு அருள்செய்தது, நாரைக்கு முத்திகொடுத்தது, நான்மாடக்கூடலானது, கடல்சுவற வேல்விட்டது, சமணர்விட்ட பசுவை மாய்த்தது, மதுரையாக்கியது, புலிமுலை புல்வாய்க்குதவியது, கல்லானைக்குக் கரும்பருத்தியது என்பன. கரிக்குருவிக்கு அருள்செய்ததைக்கூறுகையில், "வலியான் பகையும் எளியேன் பிறவியும், தொலைந்திட நோக்கி" என முரண்தொடைபடக் கூறுகின்றார். பிட்டுக்குமண்சுமந்ததைக் கூறுகையில், "வந்தியிடும்–பேறுடைய, பிட்டுக்காட் டாளும் பெருமையான்" என்று இறைவன் அடியார்க்கு எளியனும்பெருமையைத் தெரிவிக்கின்றார்.

சிவபிரான் தம் பழைய பொது இயல்பை நீத்துச் சிறப்பியல்பை மேற்கொண்டு சுந்தரபாண்டியராகி வந்தருளியசெய்தியை மிகவிரிவாகக் கூறுகின்றார் (13); சிவபெருமான் அமுதநாடு இருக்க ஆலவாய் உகந்து மட்டவிழ் கொன்றையை விட்டு வேம்பணிந்து நான்மறைக்கு ஒளித்து முத்தமிழ்க்கு இரங்கி வந்ததாகக்கூறும்பகுதியில் இன்சுவை ததும்புகின்றது. பன்றிக்குட்டிகளுக்கு அருளியதையும் நாரைக்கு முத்தி கொடுத்ததையும்பற்றிக் கூறும் பகுதிகள் அவற்றின் சாதி இயல்புகளை விளக்கித் தன்மைநவிற்சியணியமைதியோடு விளங்குகின்றன.

இந்நூலாசிரியர் அடியார்களிடத்து மிக்க பக்திபூண்டவர்; அவர்களுக்குத் தொண்டுசெய்யவேண்டுமெனனும் நோக்கம் உடையவர்; "நின், குடிவழித் தொண்ட ரடியிணை விளக்கித், துவர்க்கலை தோய்த்துப் புலர்த்திக் கொடுத்துப், புகுந்துபைம் புனலை முகந்துவந் தளித்துச், செம்மலர் கொணர்ந்து கைம்மலர்க் குதவி, அம்மலர் சொரிவார் சொன்முறை கேட்டுத், திருமுறை சுமந்து செய்முறை வழுவா, தேவல்புரிந் தொழுகி

……நின்னை வேண்ட வென்னையாண் டருளே" (4) என்று வேண்டும் இவ்வாசிரியர், "வருத்த நோக்கித் திருத்தாண் மாறி, ஆடெனச் சொன்ன வருளுடைக் கோ" எனப் பாண்டியனையும், "திருப்பெயரொன்றுற் சேயிழை தடுப்ப, இளமை நீத்த வளமைத் தொண்டன்" எனத் திருநீலகண்டநாயனாரையும் பாராட்டுகின்றார். சிறுத்தொண்டரை, "கொள்ளைத் துயர்தீர் பிள்ளையைச் சமைத்துச், சுவையமு தூட்டு நவையறு மன்பன்" என்று சொல்லுகின்றார். "கொள்ளைத் துயர்தீர் பிள்ளை" என்ற தொடர் பிள்ளையின் அருமையையும் அத்தகைய அரியபிள்ளையின்பாலுள்ள அன்பினும் சிவபிரானிடத்திருந்த சிறுத்தொண்டரது அன்பின் மிகுதியையும் புலப்படுத்துகின்றது. "கண்ணிடந் தப்பு மண்ணல்" எனக் கண்ணப்பநாயனாரைப் பாராட்டுகின்றனர். இங்ஙனம் அடியார்கள்பால் ஈடுபட்ட இவர் ஓரிடத்து அவர்களுட் சிலர் செயலைப் பழிப்பது போலப் புகழ்ந்தெடுத்துக் காட்டுகின்றார்; "தந்தையைக் கொன்ற பிள்ளையு மல்லேன், பிள்ளையைக் கொன்ற தந்தையு மல்லேன், கல்லாலெறிந்திலன், வில்லாலடித்திலன், வதைத்திடு மூன்கொடுத் துதைத்திலேன்" (28) என்ற அடிகளில் முறையே சண்டீசர், சிறுத்தொண்டர், சாக்கியநாயனார், அருச்சுனன், கண்ணப்பர் என்னும் அடியார்களுடைய செயலைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலுள் அர்த்தநாரீசர் திருமேனிவருணனையும் (1), சொக்கநாதர் திருவுருவ வருணனையும் (7) அமைந்துள்ள பகுதிகள் சிவபெருமானுடைய பலவகைப் பெருமைகளையும் ஆற்றல்களையும் விளக்குகின்றன. அர்த்தநாரீசுவர உருவத்திற்குப் பசுங்கொடி படர்ந்த பவளக் கொம்பையும், மரகதத்தோடுகூடிய பளிக்கு மலையையும், புகையோடு சேர்ந்த கனற்கொழுந்தையும், இரண்டுநிறங்கொண்ட இந்திரவில்லையும் கார்க்கடலோடுசேர்ந்த பாற்கடலையும் உவமைகூறுகின்றார்.

மருதநிலத்தை மன்னனாகவும் மதுரையையும் வையையையும் பெண்களாகவும் உருவகம்செய்து அவ்வவற்றிற்கு ஏற்றவாறு செய்திகளைக்கூறி முடித்திருத்தல் (10, 28) அறிந்து இன்புறற்பாலது.

4-ஆம் செய்யுளில் ஸ்ரீ அங்கயற்கணம்மையையும் ஸ்ரீசொக்கநாதக் கடவுளையும் தரிசனஞ் செய்யும்முறை சொல்லப்படுகின்றது. மனிதர்கள் தம் பசிப்பிணியைப் போக்குவதற்காகச் செய்யும் பலவகைச் செயல்களும், போலித்துறவிகளது தீயொழுக்கமும், அருமையறியாதாரிடம் சென்று புலவர்கள் துன்புறுதலும் அச்செய்யுளிற் கூறப்படுகின்றன. 7-ஆம் பாடலிற் சொக்கநாதரை வழிபடுவோர் பெறும் பேறும் வழிபடாதோர் படும் துன்பங்களும் சொல்லப்பட்டுள்ளன. தம்பால்வந்து புலவர்கள் செய்யுட்களைக்கூறுமளவும் கேட்டு இன்புற்று, பின் பொருளுதவியை அவர்கள் விரும்பினால் "முன்பு ஏன் நாம் சந்தோஷித்தோம்?" என்று நினைந்து முகத்திற் கோபக்குறிப்பைக்காட்டிக்கொண்டு அருகிலுள்ளாரை, "ஏன் இவரை உள்ளேவிட்டீர்?" எனச் சீறிவிழும் உலோபிகள் இயல்பை ஆசிரியர் இச்செய்யுளிற் சொல்லியிருக்கின்றார். 19-ஆம் பாட்டில் மனிதவாழ்வின் இயல்பும், நரகவேதனையும், சுவர்க்க இன்பமும் சொல்லப்படுகின்றன. இப்பகுதிகளில் வயிற்றை, "தூராச் சலதி தூரினுந் தூராப், படுகுழி" என்றும், முதுமையை, "காலுங் கோலாக் கண்களுங் கையா, அம்மியுங் கறைபுக் தம்மெபி ருக்கும், மூப்பு" என்றுங் குறிப்பிடுகின்றார். திருவருளாலன்றி மனிதர்கள் முயற்சியினால் ஆவது ஒன்றுமில்லையென்பதைப் பலவகை உதாரணங்களால் 22-ஆம் பாட்டில் விளக்குகின்றார்.

பின்னும் அவர் இடையிடையே பழமொழிகளையும் வழக்குச்சொற்களையும் எடுத்துக்கூறிச் சொல்லவேண்டிய செய்திகளைப் புலப்படுத்துகின்றார். இதனை "ஆனையுண்டகனி" (6), "பொற்கொழுவால் வரகுக்குழு துழுதே (9), "உழுந்துருள்பொழுது" (19), "கைத்தல நெல்லி" (22), "பொய்யுங் கதையுமாய்ப் போம்" (26) என்பனவற்றிற் காண்க.

சொக்கநாதரைக் கிளவித்தலைவராகக்கொண்டு பாடப்பட்ட செய்யுட்கள் சில; தலைவிகூற்று (15), பாங்கி மேகத்தைத் தூதுவிடுதல் (16), பூவையைத் தூதுவிடுதல் (20).

பொருளென்னும் பொருளில் பொருட்டு என்பதையும் (2), வளர்த லென்னும் தொழிற்பெயர்வாய்பாடாக வளர்வான் என்பதையும் (5), மிகத் துன்புறுத்தினீர் என்னும் பொருள்பட உறந்தீர் என்பதையும் (9) இவர் ஆளுகின்றார்.

இந்தப் பிரபந்தம் எழுதியிருந்த ஏட்டுப்பிரதியொன்று கும்ப கோணம் காலேஜில் எனக்குமுன் தமிழ்ப்பண்டிதராக இருந்து விளங்கிய திரிசிரபுரம் வித்வான் ஸ்ரீ சி. தியாகராசசெட்டியாரவர்களிடமிருந்து கிடைத்தது. சற்றேறக்குறைய 200-வருடங்களுக்குமுன்பு எழுதப் பட்டிருக்கவேண்டுமென்பதை அதன் பழமை புலப்படுத்தியது. அப்பிரதியின இறுதியில்,

"படைத்தாரை வேற்கண்ணி கண்ணீர்ப்ர வாகப் பரவைபொங்கி
உடைத்தா லடைக்க வுபாயமுண் டோநறை யூற்றுகொன்றைத்
தொடைத்தாம வேணியிற் சும்மாடு கட்டிச் சுமந்துசுமந்
தடைத்தா லடைபடச் சொக்கே யிதுவையை யாறல்லவே"

என்ற இனியசெய்யுள் எழுதப்பட்டிருந்தது. அதன் பின்பு திருநெல் வேலித் தெற்குப்புதுத்தெரு வக்கீல் ஸ்ரீ சுப்பையாபிள்ளையவர்கள் வீட்டிலிருந்து ஊர்க்காட்டுச் சாமிநாதவாத்தியார் என்பவருடைய பிரதியொன்று கிடைத்தது. இவற்றைக்கொண்டு, படிப்பவர்களுக்குப் பயன்படுமாறு நூதனமாக எழுதிய குறிப்புரையோடு இப்பிரபந்தம் இப்பொழுது பதிப்பிக்கப்பட்டது. இதனைச் செந்தமிழில் வெளியிட் டுதவிய பத்திராதிபர்களுடைய அன்பைப் பாராட்டுகின்றேன். இனித் தொடர்ச்சியாகப் பிரபந்தங்களையும், காப்பியங்களையும், இப்பத்திரிகை வாயிலாக வெளியிட்டு வரலாமென்பது எனது நோக்கம். திருவாலவா யுடையார் திருவருள் நிறைவேற்றவேண்டும்.

சென்னை
14-7-32.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

# ஆசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியராகிய பலபட்டடைச்சோக்கநாதபிள்ளை யென்பவர் சற்றேறக்குறைய 200 வருஷங்களுக்குமுன்பு மதுரையில் இருந்து வாழ்ந்துவந்தவர். இவருடைய மரபினர்கள் பலபட்டடைக் கணக்கு என்னும் ஒருவகை உத்தியோகம் பார்த்துவந்தவர்கள். இவருடைய தந்தையார் சொக்கலிங்கம்பிள்ளையென்பவர். "மதுரையிலிருந்த பலபட்டடைக்கணக்குச் சொக்கலிங்கம்பிள்ளை குமாரர் பலபட்டடைச் சொக்கநாதக்கவிராயர்" என்று பழைய ஏட்டுப் பிரதியொன்றில் காணப்படும் வாக்கியத்தால் இவர் சொக்கநாதக்கவிராயரென்றும் வழங்கப்படுவாரென்று தெரிகின்றது.

இவர் தந்தையார் பெயரையும் இவர்பெயரையும் பார்க்கும்பொழுது இவர் பரம்பரையினர் மதுரை ஸ்ரீ சொக்கநாதப்பெருமானிடத்து வழிவழியடிமைபூண்டவர்களென்று தோன்றுகிறது. இவர் அக்கடவுள்திறத்தில் இந்த மும்மணிக்கோவையையன்றி யமகவந்தாதி ஒன்றும், பல தனிப்பாடல்களும் இயற்றியுள்ளார். ஸ்ரீ அங்கயற்கண்ணம்மையைப்போற்றிச்செய்த தனிப்பாடல்களும் பல உண்டு. அவை இவருடைய அன்பின்மிகுதியாற் பாடப்பட்டவையாதலின், கேட்போர்களுக்கும் அன்பை உண்டாக்குவனவாக உள்ளன. இனிய எளிய நடையிலுள்ள இவரது தனிப்பாடல்களைப் படிப்பவர்களுக்குத் தமிழ் மொழியில் ஆர்வமுண்டாவதில் ஐயமில்லை. தமிழ்நாட்டுச் சிற்றூர்களில் அங்கங்கே சிலர் தமிழ்ப்பாடல்களைக் கூறியும் கேட்டும் தமிழின்பத்தை நுகர்வது வழக்கம். அங்ஙனம் கூறப்படும் பாடல்களுள் இவருடைய செய்யுட்கள் தலைசிறந்து விளங்கும்.

இவர் இராமேசுரத்தலத்திற்கு ஒருலா இயற்றியுள்ளார். அது தேவையுலாவென வழங்கும். அதன்கண் உள்ள சில செய்திகளால்,

அக்காலத்து இராமநாதபுரத்தரசராக இருந்தவர் விசயரகுநாதசேதுபதி யென்பவரென்று தெரியவருகின்றது.

திண்டுக்கல்லிற் கோயில்கொண் டெழுந்தருளிய ஸ்ரீபத்மகிரிநாதர் விஷயமாகத் *தென்றல்விடுதூது என்னும் ஒரு பிரபந்தம் இவர் இயற்றியுள்ளார்.

திருமாலிருஞ்சோலைமலை அழகர்மீது இவர் இயற்றிய கிள்ளைவிடுதூது ஒன்றும், கன்னிவாடியில் அக்காலத்தில் ஜமீன்தாராக இருந்த நரசிங்கநாயகர் மீது இயற்றிய வளமடல் ஒன்றும் உண்டு.

பரஞ்சோதிமுனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்திற் குரிய சிறப்புப்பாயிரச்செய்யுட்கள் இரண்டு இவராலியற்றப்பெற்றனவாகச் சில பழைய ஏட்டுச்சுவடிகளிற் காணப்படுகின்றன. அதனால் இவர் அப்புராணம் அரங்கேற்றியகாலத்து உடனிருந்துகேட்டு இன்புற்றவர்களுள் ஒருவரெனத் தெரிகின்றது.

---

*தேவையுலாவும் இதுவும் குறிப்புரையுடன் என்னாற் பதிப்பிக்கப்பட்டுள்ளன

உ

கணபதி துணை.

பலபட்டடைச் சொக்கநாதபிள்ளை பாடிய

# மதுரை மும்மணிக்கோவை.

## காப்பு.

நேரிசைவெண்பா.

மும்மணிக் கோவையா னான்மாடக் கூடல்வாழ்
எம்மணிக் கோவையெடுத் தேத்துதற்கு—வெம்மை
வெளிறுதிருப் பாதமலர் வேண்டவருள் சித்திக்
களிறுதிருப் பாதமலர் காப்பு.

## நூல்.

### அகவல்.

க. திங்களமு தூற்றுங் கங்கைநதி சுமக்கும்
பவளமால் வரையிற் றவழ்கருங் கொண்டலின்
மின்னொளி பரந்து வெயில்விரித் தாங்குக்
கூந்தலுஞ் சடையுஞ் சேர்ந்தழ கெறிப்ப
ஒற்றை நாட்டமு நெற்றியிற் றிலகமும்
சாந்தொடு [1]மெழுதிய குங்குமப் பொட்டெனச்

---

குறிப்புரை.

(காப்பு.) மும்மணி...நான்மாடம் : எண்ணணி. மணிக் கோ—சொக்கநாதர்; மணி—அழகு. வெளிறு—பாசஅறிவு, பசுவறிவு; (தணிகை. காப்பு. 2.) அமலர்—தூய்மையையுடைய அடியார்கள். சித்திக்களிறு—சித்தி விநாயகர். அமலர் வேண்ட வெளிறு திருப்பாது அருளென்க.

க. இச்செய்யுளில் முதல் 50 அடிகளில் அர்த்தநாரீசுவரத்திருவுருவ வருணனை கூறப்படும்.

1. திங்கள் அமுதை ஊற்றுவது கங்கைநதியில். 2–4. கூந்தலுக்கு மேகமும் சடைக்கு மின்னலும் உவமை. 6. சாந்து—சந்தனப்பொட்டு.

[பிரதிபேதம்.] [1]மெழுகிய.

சேந்த கண்ணொடுங் கரியவிழி யலர
மற்றுமோர் விழியின் முற்றுமோர் குவளை
கதிர்முகங் கண்டு புதுமுக மலர
வெவ்விடங் குடித்த வெவ்வனோ யகலக்
குமுதத்திற் பிறந்த வமுதம் பொலிய
ஒருசெவி யரவ மொருசெவிக் குழையின்
பன்மணி நிலவைத் தன்மணி காட்ட
எஞ்சுவா னளித்த [1]நஞ்சுபொதி கண்டமும்
தங்குல களித்த மங்கலக் கழுத்தும்
ஒன்றுபட் டொளிரக் கொன்றையொடு பிணித்த
கோங்கரும் பன்ன கொங்கையும் பைந்தலைக்
கொத்து மாலையு முத்துமா லிகையும்
மென்னகை பரப்பப் பன்னகப் படமணி
ஒருபுறக் கச்சென விருபுறக் கச்சின்
[2]உருவமுஞ் சான்ற மருமமுந் தோன்றக்
கமலத்தின் மலர்ந்த காந்தட் போதும்
காந்தளின் மலர்ந்த கமலமும் போல
வெங்கதிர்க் கனலும் பங்கயக் கணையும்
தரித்திடுந் தகைமையிற் றிருக்கரம் விளங்க

---

7. இங்குக் கூறப்பட்டவை திருமுகத்திலுள்ள கண்கள். 8. மற்றும் ஓர் விழியின்—அம்பிகையின் வேறொரு விழியைப்போல. குவளை—கண்ணுவதஞ்சமாகிய குவளைப்பூ; "காதின் மிசைநீலங் கைபுனைவீர்" (தண்டி. சூ. 41, மேற்.); "பான லஞ்செவி மிசையணிந் தனளொரு பாவை" (பிரபு. மாயைபூசை. 9.) 8–9. குவளை மலர. 9. கதிர்முகமென்றது வலக்கண்ணை. 10–11. திருவாய்மலரின் வருணனை. குமுதம்—அம்பிகையின்வாய். 12–3. திருச்செவி. வலச்செவியிற் குழையாக அணிந்த பாம்பின் மாணிக்கம், இடச்செவியிலணிந்த குழையிலுள்ள முத்தின் ஒளியாகும் நிலவைக் காட்ட. 14–6. திருக்கழுத்து. 16–21. திருமார்பு. 19. நகை—ஒளி. படம் அணி. 19–20. படம் வலப்புறக்கச்சென விளங்க. 22–5. திருக்கரங்கள். 24. பங்கயக்கணை—தாமரையாகிய அம்பு; இஃது அம்பிகையின் திருக்கரத்திலுள்ளது; அழகாம்பிகை. சப்பாணிப். 5.

[பி-ம்.] [1]நஞ்சுபதி, [2]உருவங் காண்ற.

ஒருமக வருந்தியு மிருமகப் பெற்றும்
மும்மடி யுதரஞ் செம்மை பூப்ப
ஒருபாற் புலியு மொருபாற் கலையும்
மருங்கிற் கிடந்து வனப்புவழிந் தொழுக
வாய்விட வரவின் வாய்விடாச் சிலம்பும்
வாய்விட் டிரங்கு மணிச்சிலம் பொன்றும்
அதிர்சிறு சதங்கையு மொருபெருஞ் சதங்கையை
நேரச் சுழலும் வீரக் கழலும்
முறைமுறை வயங்க மறைமுறைக் கொல்காது
வெஞ்சினக் கால னஞ்சச் சீறியும்
பஞ்சினுக் கஞ்சி யஞ்சிமுகஞ் சிவந்தும்
எம்முடைத் தலையினு மம்மிக் கல்லினும்
வைத்திடப் பொறுத்தும் பத்தியிற் பணிவார்
கண்மலர் பறித்துங் கரமலர்க் கிரங்கியும்
மாநிலங் கிழித்த வேனத்திற் கொளித்தும்

---

**26-7. திருவயிறு.** 26. ஒருமகவு—சிறுத்தொண்டருடைய குமாரர். இருமக—விநாயகர் முருகக்கடவுள். 27. மும்மடி—மூன்று மடிப்புக்கள். முற்கூறிய மூன்றுசெயல்களுக்கு ஏற்ப மும்முறை என்ற பொருளும் தோற்றுகின்றது. **28–9. திரு இடை.** புலி—புலித்தோல். கலை—ஆடை. புலி, கலை(மான்) என்றது ஒருநயம். **30–42, திருவடிகள். 30. வாய் விடம்—வாய்ந்த நஞ்சு.** பாம்பு தன்வாயில் வாலைப் புகுத்தி இறைவன் ஆணையால் இறுகக் கடித்துக்கொண்டிருக்கின்றமையின் வாய்விடாச் சிலம்பு என்றார்; "பொன்னெடு மலையைப் பன்னிரு வடங்கொடு, புணரியைக் கடைந்தநாள் புணர்த்த பன்னக, அரசன்வாய் நெரித்தவ னணிவா லுய்த்திடப், பற்றிவளை யெயிற்றா னெடுமுன் கையிற், கடகமாயினால்" என்ற பழம்பாடலும், 'இதில் பாம்பின்வாலும் தலையும் முடிந்திட நீளம் போதாமையின் வாயை நெரித்து வாலைப் புகவிட அது வாலைக் கடித்துக்கொண்டு கங்கணமானது. ஆதலால் ஈச்சுவரன் ஆக்கினையை அஞ்சி **வாய்விடமாட்டாது**' (தக்க. 645, உரை) என்பதும் இங்கே அறிதற்குரியன. **32.** பெருஞ்சதங்கை—ஒருவகைக் காலணி; "பரித்தாளும் வாணன் பலசதங்கை யிட்ட, திருத்தாளி னூபுரமுஞ் சேர்த்தி" (தேவையுலா, 76) என்பது இந் நூலாசிரியர் வாக்கு. 34. மறை முறைக்கு—வேதங்களின் முறையீட்டிற்கு. **36.** பஞ்சினு...சிவந்து: "பஞ்சி யடாணிச்ச நெருஞ்சி யீன்ற பழமாமென், றஞ்சு மலரடிகள்" (சீவக. 341); "அரக்கார்ந்த, பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையெனவென், றஞ்சிப்பின் வாங்கு மடி" (நாலடி. 396.) 39. கண் மலர் பறித்து மென்றது சக்கரம் பெறுதற்குத் திருமால் கண்ணைப்பறித்து வழி பட்டமையைக் குறித்தது. 40. ஏனம்—ஆதிவராகம்.

வள்ளவாய்க் கமலக் கிள்ளையைச் சார்ந்தும்
பொன்னடி சிறப்ப வென்னையா ளுடைய
தெய்வநா யகநின் மெய்யொரு பாதியும்
பவளக் கொம்பிற் படர்பசுங் கொடியெனத்
தவள வெற்பிற் றழைத்தமா கதமெனப்
பொங்குகனற் கொழுந்தொடு புகைக்கொழுந் தென்ன
இருநிறங் கொண்ட விந்திர வில்லெனப்
பாற்கட லோடுங் கார்க்கடல் புணர்ந்தென
இமையவெற் புதவிய வுமையவ ளொருத்தியொடு
வீற்றிருந் தருளிய விண்ணவர் கடவுள்
ஆடற் கொடியமர் கூடற் றனிச்சுடர்
மண்ணகத் திருந்து வான்முகடு தடவி
வெண்கரி சுமக்கக் கருமுகில் சுமந்து
மேருவைப் [1]பழித்த சீரிய விமானத்து
வளரொளி கிளைத்த மாணிக்கக் குன்று
கதம்பகா னனத்தி விதம்பெற முளைத்த
பாண்டரங் கத்தனி முதலை
வேண்டுது மவனரு ளீண்டுபெறற் பொருட்டே. (க)

---

41. கிள்ளை—திருமகள். 47. "தானு முமையவளும், இந்திர சாப மெனுமழகும்" (தேவையுலா, 260.) 51. ஆடற்கொடி—வீரலட்சுமி. 53. வெண்கரி—எட்டு வெள்ளையானைகள். 54. விமானம்—இந்திரவிமானம். 56. கதம்ப கானனம்-கடம்பவனம். 57. பாண்டரங்கம்-ஒருவகைக்கூத்து ; இது முப்புரங்களை வென்றபோது ஆடியது; "ஏறமர் கடவுண் மூவெயி லெய்வுழிக், கூறுகூ றாகக் கொடியொடும் படையொடும், வேறுவே றுருவின் விண்மிசைப் பரந்தன, ரவ்வழி யொளியொடு முருவொடுந் தோன்றித், தேர்மு னின்று திசைதலை பனிப்பச், சுவையுங் குறிப்பு மொழிவில தோன்றி, யவையவை யவ்வழி யாடின னுட, மைந்தரு மகளிருந் தந்தநிலை யழிய, மெய்ப்படு சுவையொடு கைப்படை மறப்பக், கடிய காலக் காற்றென வேற்றவன், படிநிலை திரியாப் பாண்டரங் கம்மே" கலி. 1, ந. மேற்.

[பி-ம்.] [1]பழிக்குஞ்.

### வெண்பா.

உ. பொருட்டா வெனையாண்டு போதன்மாற் கெட்டா
அருட்டோய வைத்தருளு மத்தர்—இருட்டோயும்
பூங்கடம் பாடவியார் பொன்னடியைப் போற்றுதார்
தாங்கடம் பாடவியார் தாம். (உ)

### கலித்துறை.

௩. தாமொன் றினுங்கல வாதே கலந்தெம்மைத் தம்மையிவர்
ஆமென் றறியவொட் டாதே [1]புசிப்பித் தருவினைத்தீ
வேமென் றவித்தரு ளாதே யருளி வெளிப்படுவார்
மாமென் றுவரிதழ்க் கூடற் பிராட்டிக்கு வாய்த்தவரே. (௩)

### அகவல்.

௪. வாய்ந்தபே ருலகிற் காய்ந்திடும் பசியாற்
குன்றுபல வேறியுஞ் சென்றுகடல் கடந்தும்
வெங்கா னகத்திற் றங்கா து திரிந்தும்
புனல்வழி வெயரொடு கனல்வழி நடந்தும்

---

உ. பொருட்டா—பொருளாக; பொருட்டு: வழக்கு; இருட்டுப்போல. போதன்—பிரமன். மாற்கு எட்டா. அருளில் மூழ்கும்படி. இருள்தோயும். கடம்பாடவி—கடம்பவனம். தாங்கள் தம் பாடு அவியார் தாம்; பாடு—வருத்தம்; "பாடுபெட்டுத்தேடி" (நல்வழி. 22); "பட்டபாடே" வி. பா. கிருட்டினன் தூது. 16.

௩. தாமென்றது சிவபெருமானை. எம்மையும் தம்மையும். புசிப்பித்து-வினைப் பயன்களை உண்பித்து. மென் துவர்—மெல்லிய பவளத்தைப்போன்ற. கூடற் பிராட்டி: "பொன்போலுங் கூடற் பிராட்டியைச் சேவிக்கப் போம்பொழுதில்" தனிப்.

௪. இதன் 27-ஆம் அடிவரையில் தம் பசிப்பிணியைப் போக்கிக் கொள்ளும்பொருட்டு மனிதர் செய்யும்பலவகைச்செய்திகள்கூறப்படும்.

1. பிறவிப்பிணியை நீக்கிக்கொள்வதற்குக் கருவியாகிய மூர்த்தி, தலம் தீர்த்தம், அடியார்கூட்டம் முதலிய இருத்தலின் "வாய்ந்த பேருலகில்" என்றார். 4. புனல்வழி வெயரொடு—வழிகின்ற வேர்வை நீரோடு. கனல்வழி—கொதிக்கின்ற பாலைநிலத்துவழியில். 1–4. "சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும், பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம், பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால், நாழி யரிசிக்கே நாம்" (நல்வழி, 19.)

[பி-ம்.] [1]பொசிப்பித்.

வெயிற்றலை பிளப்ப வெள்ளிடை நின்றும்
அயிற்றலை யெயிற்றி னாவினைப் பிடித்தும்
கையா னடந்துங் கயிற்றுவழிச் சென்றும்
கம்பத் தேறியு மும்பரிற் பறந்தும்
நீரிடை மிதந்து நெருப்பிடை மூழ்கியும்
ஒவ்வா வேடஞ் செவ்வியிற் புனைந்தும்
அறநெறி யுரைத்து மறநெறி யொழுகியும்
பிறர்பொருள் வெஃகித் துறவு பூண்டு
மாயாப் பிறவியை யீவார்க் குதவியும்
சிற்றினத் தவர்த முற்று வறிவால்
தம்பே ரறிவைத் தாழ்ந்திடச் செய்தும்
காமமுந் துறவுங் காவெனத் தூங்கும்
தன்மை யோர்க்கு மென்மொழி மடவார்
கோலமு மின்பமுங் குறிப்பொடுங் கூறி

---

5. வெள்ளிடை—நிழலில்லாத இடம். 6. அயில் தலை எயிறு—கூரிய முனையையுடைய பல். 9. நீரிடை மிதத்தல்—ஜலஸ்தம்பம். நெருப்பிடை மூழ்கல்—அக்கினிஸ்தம்பம். 10. ஒவ்வாவேடம்—கூடாவொழுக்கத்திற்கு ஒவ்வாத துறவு வேடத்தை; “வலியி னிலைமையான் வல்லுருவம்” (குறள். 273) என்றார் திருவள்ளுவரும். 13. மாயாப் பிறவியை ஈவார்க் குதவல் “நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து, வாழ்வாரின் வன்கணா ரில்” ‘தானஞ்செய்வாரை வஞ்சித்தலாவது யாம் மறுமைக்கட் டேவராதற்பொருட்டு இவ்வருந்தவர்க்கு இன்ன தீதுமென்று அறியா தீந்தாரை அதுகொண்டு இழிபிறப்பினராக்குதல். அவர் இழிபிறப்பினராகுதல் ‘அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினா லலறு முந்நீர்த், தடங்கட னடுவுட் டீவு பலவுள வவற்றுட் டோன்றி, யுடம்பொடு முகங்க ளொவ்வா ரூழ்கனி மாந்தி வாழ்வார், மடங்கலஞ் சீற்றத் துப்பின் மானவேன் மன்ன ரேறே’ என்பதனா னறிக’ (குறள். 276, பரி.) 14–5. சிற்றினம் சேர்ந்து அதன் பழக்கத்தால் தம் அறிவைக் குறைத்தும்; அவர்களுக்கு இச்சகம் பேசித் தம்அறிவைக் குறைத்துக்கொண்டுமென்பதும் பொருந்தும். 16–8 காவென—காமரத்தில் தூங்குவதுபோல; காமரம்—காவடித்தண்டு. காமமும் துறவும் சமமாகத் தன்மையாகிய காத்தண்டில் உள்ளன. அத்தகையோர்க்கு மடவார்கோலம் கூறுதலாற் காமம் மிகும். அப்பொழுது ஒருபால் கனமேற மற்றொருபால் கனமின்றிக் கெடுதல்போலத் துறவு கெடும்.

இருள்வழி பழக்கிப் பொருள்பல கவர்ந்தும்
உண்ணா தூட்டியு முறங்கா துறக்கியும்
வன்சொற் பொறுத்து மின்சொற் கிடைந்தும்
புத்தமு தென்னச் சொற்சுவை திரட்டிக்
கல்லாப் புல்லர் பொல்லாச் செவியாம்
புற்றி னூற்றி வெற்றுடம் பாகியும்
உளம்பதை பதைப்பத் தளர்முக மலர்ந்தும்
தங்குறை பகர்ந்திட் டவர்குறை கேட்டும்
இவ்வா றுழலு மியல்பினோர் பலரே
அவ்வா றுழலா தணிநெடு மாடக்
கூடலிற் பயின்று நீடுதிரை வையைத்
தண்டுறை படிந்து வண்டிசை மிழற்றும்
செம்பொற் றாமரைப் பைம்புன லாடி
ஐந்துகைக் குன்றைச் சிந்தையொ டிறைஞ்சி
மும்மூலே சுமந்த நுண்மருங் கொசியச்
[1]செவ்வரி பரந்த கருங்கயல் புரண்டு
பைங்குழை கடப்பத் திங்களுக் கொல்காப்
பேரிருள் பிறங்க வாரியிற் பிறந்த
தெள்ளமு தவர்ந்து கள்ளவிழ் கடப்பங்
காவிடை நின்ற தேவியைப் பரவி
ஐயநின் பாதச் செய்யதா மரையிலென்
கைம்மலர் தூவி மெய்ம்மயிர் பொடிப்ப
நாய்த்தலே கிடத்தி வாய்த்தலே வாழ்த்திக்
கண்களி கூரப் புண்படு முள்ளத்

21. இடைந்தும்—ஏமாந்துநின்றும். 23. பொல்லாச்செவியென்றது "கேள்வியாற் றோட்கப்படாத செவி"யை (குறள். 418.) 25. உன்ளொன்று புறம்பொன்றாக இருத்தல். 31. பொற்றாமரைப் பைம்புனல்—பொற்றாமரைத் தீர்த்தத்தில். 32. ஐந்துகைக் குன்றை—சித்திவிநாயகரை. 35—6. திங்களுக்கு ஒல்காப் பேரிருள்—கூந்தல். 36—7. வாரியிற் பிறந்த அமுது—திருமகளை; (மதுரைமும். ௧: 41.) 41. நாய்த்தலே—நாய்த்தலேபோன்ற என்றலேயை. வாய்த்தலே—வாயால். 42. புண்படும்—முன்பு புண்பட்ட.

[பி-ம்.] [1]செவ்வரி பரந்து.

தானந்த வெள்ள மலையெறிந் தோட
இறவாப் பேறு மிறந்தவ ரடையும்
பிறவாப் பேறும் பேயனே னடைந்து
கோயில் சூழ்ந்து வாயில் கடவாநின்
குடிவழித் தொண்ட ரடியிணை விளக்கித்
துவர்க்கலை தோய்த்துப் புலர்த்திக் கொடுத்துப்
புகுந்து பைம் புனலை முகந்துவந் தளித்துச்
செம்மலர் கொணர்ந்து கைம்மலர்க் குதவி
அம்மலர் சொரிவார் சொன்முறை கேட்டுத்
திருமுறை சுமந்து செய்முறை வழுவா
தேவல்புரிந் தொழுகித் தேவருங் காணு
மன்னிரும் புகழ்மது ரேச
நின்னை வேண்ட வென்னையாண் டருளே. (ச)

வெண்பா.

ரு. ஆண்டாய் தமிழ்க்கூட லண்ணலே நின்பாதம்
வேண்டா வெனையும் வெருளாமல்—ஈண்டிரங்கிக்
காவாக்கா லுன்னைக் கவிஞரெடுத் தெவ்வாறு
மாவாக்காற் சொல்வார் வளம். (ரு)

கலித்துறை.

சு. வளத்தானை யும்பர் வளர்வானை வேண்டிவன் னஞ்சையுண்ட
களத்தானை முத்தமிழ்க் கூடற் பிரானைக் கனிந்தவர்தம்
உளத்தானை [1]யெண்ணி யுருகார் பிறவி யுலைத்தெறியச்
சளத்தானை யுண்ட கனிபோற் கெடுவர் தவறுபட்டே. (சு)

---

46-முதல் துறவிகளுக்குத் தொண்டுபுரிதலை வேண்டுகின்றார். 48. துவர்க்கலை-காவியுடை. 52. திருமுறை-அடங்கன்முறை.

ரு. ஆண்டாய்:விளி. மா வாக்கால்-பெரிய வாக்கு வன்மையால்.

சு. வளத்தானை-செல்வத்தை யுடையவனை; உம்பர் என்பதனோடு கூட்டி வளம்பொருந்திய சேனைகளையுடைய தேவனெனினும் பொருந்தும். வளர்வானை—வளர்தலை; வான் : தொழிற்பெயர்விகுதி. களம்-கழுத்து. பிரானை—வள்ளலை. உலைத்து-வருத்தி. சளத்து-வஞ்சனையையுடைய; ஆனைக்கு அடை. ஆனையுண்ட கனி—ஆனையென்னும் நோயால் உண்ணப்பட்ட விளங்கனி; "தூம்புடை நெடுங்கை வேழந் துற்றிய வெள்ளி லேபோல்" (சீவக. 232) என்பதும் அதன் ஒப்புமைப்பகுதிகளும் இங்கே அறியற்பாலன.

[பி-ம்.] [1]வேண்டி யுருகார்.

## அகவல்.

எ. தவறுச் செல்வத் துவரியிற் படிந்து
பொருட்புனல் வாரி யருட்புலத் துப்பெய்
தறப்பெரும் பயிரைச் சிறப்பொடும் வளர்த்து
வள்ளலைப் பழித்து வரையாது கொடுத்துச்
செந்தமிழ் மாலையு மந்தண ராசியும்
புகழா பரணமு மிகழா தணிந்து
குன்றிற் சுடரென நன்றியொடு பரந்தும்
பொற்கலத் தன்ன மொக்கலொ டருந்திச்
சாந்தம் பூசிப் பூந்துகி லுடுத்துப்
பலபணி யணிந்து கலவியிற் பயின்று
மக்கள்சொற் குருகி யொக்கக் குழறிப்
பொன்றிகழ் மேடையிற் றென்றலுக் குடைந்து
மணிநகை மடவா ரணிமுலை தழுவியும்
கைம்மா வுகைத்தும் பரிமா நடத்தியும்
காமரு மடந்தையர் சாமரை யிரட்டச்
சிவிகை யேறிக் கவிகையொடு வந்தும்
இன்னிலை யோர்க டங்நிலை வழாஅது
வீழ்நாள் படாஅது வாழ்நாள் பெறுதலும்
தவப்புணை பிடித்துப் [1]பவக்கட னீந்தக்

---

எ. 1-முதல் 18-வரை சோக்கநாதரை வழிபடுவோர் பேறு கூறப்படும்.

1. செல்வத் துவரி-செல்வமாகிய கடல்; "உவர்க்கட லன்ன செல்வரு முளரே" (நன். வி. சூ. 269, மேற்.) 2. பொருட்புனல்-பொருளாகிய நீரை. அருள்-தொடர்பில்லார்மாட்டுச் செலுத்துவது; ஒன்றின் துயர்கண்டாற் காரணமின்றித் தோன்றும் இரக்கமெனலும் ஆம். அருட் புலம்-அருளைச் செலுத்துதற்குரிய இடம். 7. குன்றிற் சுடரென-மலைமே லேற்றிய விளக்குப்போல; (சீவக. 262); "குன்றின்மே லிட்ட விளக்கு" (பழமொழி, 204.) பரந்து-புகழாற் பரவி. 8. ஒக்கல்-சுற்றம். 9. பூந்துகில்-பூத்தொழிலமைந்த ஆடை. 10. பணி-ஆபரணம். 13. மணி-முத்து. 14. கைம்மா-யானையை. 15. இரட்ட-மாறி யசைய. 16. கவிகை-குடை. 17. இன்னிலையோர்-இல்லறத்தார்கள்.

19-முதல் சோக்கநாதரை வேண்டாதார் உறும் துன்பம் கூறப்படும்.

19. தவமாகிய புணை. பவக்கடல்-பிறவியாகிய கடலை.

[பி-ம்.] [1]பவக்கட னீந்திக்.

காயத் தீவிற் றீவினைச் சரக்காற்
சனனப் பொருளைத் தளரா தீட்டியும்
நவரசங் கனிந்த நாற்கவிப் புலவர்
மதுர மூறு முதுமொழிப் பாடலை
அன்பொடு கேட்டு நன்குமதித் தேத்தி
அரும்பொருள் கேட்கி னப்பொருட் கேங்கிச்
சொற்குறை தேடி முற்குறை நினைத்து
நகைமுக மொளித்துப் புகைமுகங் கொண்டு
தம்பா லவரை வெம்பிச் சீறி
வறிதே போக்கு நெறிபல கருதியும்
பற்றாப் பழங்கலை தைத்துடை யுடீஇ
கொய்படு நீரைக் கையா லருந்தி
நிறையா வயிற்றொடு தறையிற் கிடந்து
கண்படை நீங்கிக் காதலை யொழிந்து
மனைவியைத் துறந்து மக்களை யொரீஇ
ஏற்பன [1]புசியா [2]நோற்பவ ராகியும்
தருந்தமக் கொன்றும் [3]விருந்தினர்க் கொன்றும்
குறித்தூண் பிரித்துக் கூடா தளித்தும்
தம்மனை யிகந்து பிறர்மனை விரும்பியும்
ஈதலுக் கொல்கி யேற்றலுக் கிசைந்தும்
ஊன்சுவை பெருக்கி யுயிர்பல குறைத்தும்
மேற்குலத் தெய்தி யிழிகுலத் துண்டும்
இழிகுலத் தெய்தி மேலோர்க் கூட்டியும்
உடற்பயன் கொள்ளா தடற்பெருங் காலற்
கிடுவிருந் தாய்ச்சில [4]விவ்வா றழிதலும்

20. காயத் தீவில்-உடம்புகளாகிய தீவுகளில். 25. பொருள்-திரவியத்தை. பொருட்கு ஏங்கி-பொருளை இரவலர்க்குக் கொடுத்தலில் ஏங்கி. 26. முற் குறை-முன்னமே களித்ததாகிய குற்றம். 28. தம்பாலவரை-தம்மைச்சார்ந்தோரை. 30. பற்றா-உடுக்கப் பற்றாத. கலை-ஆடை.

36-7 இவ்வடிகளிற் பந்திவஞ்சனைக் குற்றம் கூறப்படுகின்றது.

[பி-ம்.] [1]பொசியா. [2]நோற்போ ராகியும். [3]விரும்பினர்க் கொன்றும். [4]இவ்வா றிழிதலும்.

நீரிடை முளைத்த நெருப்பின் கொழுந்தென
வெண்டிரைக் கங்கையிற் செஞ்சடை பிறங்கக்
கூன்பிறைப் பிள்ளையுந் தேன்பொதி கொன்றையும்
பன்றிக் கோடும் பஃறலைப் பாந்தளும்
புதுநிணத் தலையு முதுகோட் டாமையும்
ஊன்கழி யென்பும் பூந்துண ராத்தியும்
பசுந்தளி ரறுகும் பானிற வெருக்கும்
இடையிடை தொடுத்த தொடைகிடந் தசைய
ஊழித் தீயெழுந் தாழியைக் குடித்தென
எல்லா வுயிரையு மொல்லையி னருந்தியும்
[1]நாவுறப் பசித்த மூவிலைச் சூலமும்
கண்டகார்க் கடலு மண்டத் தொகுதியும்
உடைபடக் குமுறுந் தமருகப் பறையும்
ஒற்றை யாழியி னேழ்பரி பூண்ட
மாயிருந் தேரி னாயிரங் கதிருடைப்
பன்னிரு கோடிப் பகலையுஞ் சீறி
மாருதங் குடித்து வடவையை விழுங்கிக்
காயெரி பரந்த தீவாய் மழுவும்
மாமுனித் தலைவ ரோமக் கனலிற்
கூடப் பிறந்த வாடற் புலியும்
யானையுங் கீழ்பட மேனிமிர்ந் துயர்ந்து
சென்னியிற் றரித்த திங்களி லிருந்து
கையிற் குதித்தமை காண்வா னூன்றிய
இருகா துடைய வொருமான் கன்றும்

---

45–6. சடைக்கு நெருப்பின் கொழுந்து உவமை. 48. பஃறலை-பல் தலை. 49. முதுகோட்டாமை-ஆமையின் முதுகு ஓடு. 57. குமுறும்-முழங்கும். தமருகப் பறை-உடுக்கை யென்னும் வாத்தியம். 60. பகல்-சூரியன். 61. மாருதம்-காற்று. வடவை-வடவாமுகாக்கினி. 63. முனித்தலைவர்-தாருகாவனத்து முனிவர்கள். 64. ஆடல்-வெற்றி. 64–5. புலி யென்றதும் யானை யென்றதும் அவற்றின் தோலை. புலித்தோல் அரையிலும் யானைத்தோல் மேலும் அணியப் பெற்றவை. 68. மான்கன்று திருக்கரத்தி லுள்ளது.

[பி-ம்.] [1] நாவிற் பசித்த.

செம்மையிற் புணர்ந்து மம்மர்நோ யகல
நரபதி கூனும் சுரபதி சாபமும்
வெண்கரித் துயருங் கருங்களிற் றாற்றலும்
வலியான் பகையு மெளியேன் பிறவியும்
தொலைந்திட நோக்கி நலந்திகழ் கூடலின்
அளிமுரல் கடம்பிற் கிளியொடு வளர்ந்த
எம்பெரு மானை யும்பர்நா யகனை
வேண்டுநர் பேறும் வேண்டா வறிவிலர்
மாற்றரு மிழிவு மாதலிற்
போற்று திராஅ ராற்றலுடை யோரே. (எ)

## வெண்பா.

அ. ஆறுடைக்கு மந்நா ளறியா வழுதியர்கோன்
மாறுபட மண்சுமந்து வந்தியிடும்—பேறுடைய
பிட்டுக்காட் டாளும் பெருமையா னென்குறையும்
பிட்டுக்காட் டாளும் பிறர்க்கு. (அ)

## கலித்துறை.

கூ. பிறந்தீ ரறிவுடை மக்கட் பிறப்பிலப் பேறடைந்தும்
துறந்தீர் மதுரைப் பிரான்றாளை நீர்துறக் கங்கருதித்

---

69. மம்மர்-மயக்கம். 70. நரபதி-கூன்பாண்டியன். சுரபதி-இந்திரன்; சாபம்-விருத்திர ஹத்தி. 71. வெண்கரித்துயர்-வெள்ளையானையின் சாபம். கருங்களிறு-சமணர்விட்ட யானையினது. 72. வலியான்-கரிக்குருவியின். 71-2. பொருள் முரண். 74. கிளி-அங்கயற்கணம்மை. 77. மாற்றரு-மாற்றுதற்கு அரிய. 78. ஆற்றல்-ஐம்புலனை அடக்கும் வன்மை.

வாழ்நாள் பெறுதல் (18) வேண்டுநர் பேறெனவும் (76), அழிதல் (44) வேண்டா அறிவிலர் (76) இழிவெனவும் (77) கொள்க.

அ. ஆறு-வைகை யாறு. வழுதியர் கோன்-அரிமர்த்தன பாண்டியர். மாறு-பிரம்பு. பிட்டுக்கு ஆள் தான் ஆம்; ஆள்-ஏவலாள்; அடியார்க்கு ஆளாதலே ஒருபெருமை ஆதலின் பெருமையானென்றார். பெருமையானென்று இங்கே அமைத்தது மிகப் பாராட்டற்குரியது. பிட்டு-கூறுபடுத்தி; பிள்:பகுதி.

கூ. பேறு-இலாபம். தாளைத் துறந்தீர்-திருவடிகளை நினையா தொழிந்தீர்; துறக்கம் கருதித் துறந்தீர்.

திறந்தீர் தவங்களைச் சிந்தித் தடலையுஞ் சிவனையும்
உறந்தீர்கெட் டீர்பொற் கொழுவால் வரகுக் குழுதுழுதே. (௯)

### அகவல்.

க௦. உழுகருஞ் சேற்றுக் கழனியிற் பொலிந்த
சிறுமணி நெட்டிலைச் செந்நெற் பவளமும்
அரிதலைப் பெய்துதிர் விரிதலைத் தாழையுட்
பச்சிளந் தோட்டுப் பாளைவெண் டாளமும்
கருங்கமு கிறைக்கும் பசுங்காய்ப் பச்சையும்
செங்காய்த் திரளின் செம்மணிக் குப்பையும்
இசைந்தடை கிடக்கு மெகினவெண் டுகிலும்
விசும்பெனப் பரந்த வெண்டிரை வாவிச்
செந்தேன் குதிக்கும் வெள்ளிதழ்க் கமலம்
பொன்னிறக் கொன்றை சென்னியிற் சொரிந்து
பொற்றகடு நிறைத்த வெள்ளிச் செப்பென
மருங்குறு நாவற் கருங்கனி சுமந்து
சாந்துவழித் திட்ட தந்தச் செப்பென
விரிநில வெறிக்குஞ் சுரிசங்கு கிடந்து
வெண்ணெயும் படிகக் கிண்ணமும் பொருவச்
செந்தா மரைமிசைத் தேமா நறுங்கனி

---

திறம் தீர்-நன்மைப் பகுதியின் நீங்கிய. உறந்தீர்-துன்புறுத்தினீர். உழுதுழுது கெட்டீர். பொற்கொழுவால் வரகுக்குழுத லென்பது ஒரு பழமொழி.

க௦. 1-முதல் 20-வரை மருதநில வருணனை.

2. நெல்லாகிய பவளம். 3. அரி தலைப்பெய்து—வண்டுகள் சேர்ந்து. தாழை—தென்னை. 4. தோடு—தென்னையின் ஓலை. பாளையாகிய முத்து. 3–4. உதிர்தாளமென இயைக்க. 5. கமுகு—பாக்குமரம். பாக்கின் காயாகிய மரகத மணி. 7. எகின வெண் துகில்—அன்னமாகிய வெள்ளிய ஆடை. 9-11. கொன்றை மலரின் இதழுக்குப் பொற்றகடும், வெண்டாமரைமலர்க்கு வெள்ளிச் செப்பும் உவமை. 13. சாந்து—கருஞ்சாந்து. இட்ட—வைத்த. 14. சுரி—சுழிந்த. 14–5. சங்குக்கு வெண்ணெய் உவமை; "கண்ணன் காமும் வெண்ணெயும் போல ......தாமரை, உள்வளை யுறங்கும் வள்வாய்க் கூடல்" கலி. 24:30-33.

வெள்ளிதழ்க் கமலம் (9) வெள்ளிச் செப்பெனத் (11) தந்தச் செப்பெனப் (13) படிகக் கிண்ணமும் பொருவ (15) வெங்க.

என்னம் மனைகரப் பொன்னம் மனையென
மன்னிய பாசடைப் புன்னையி னரும்பு
விரவுவெள் ளடிசின் மரகதத் தட்டென
ஒருதனிக் கவிகை மருத வேந்தனுக்
கிதமுற மதுரையாள் புதுவிருந் தளிப்பப்
பாராரைச் சந்துங் கராசலக் கோடும்
காளகிற் குறடுங் கோளரா மணியும்
ஒள்ளொளித் தரளமுங் கள்ளவிழ் மலரும்
விசைநடைத் தும்பியு மசைநடைப் பிடியும்
தெண்டிரைக் கவரியுங் கொண்டிரைத் தெழுந்து
பெய்புனற் றுகிலுஞ் சைவலக் கூந்தலும்
பொருகயல் விழியுந் தரள மூரலும்
உந்திச் சுழியுங் கொங்கைக் குமிழியும்
மெய்யிற் றரித்த வையைமா நதிப்பெண்
கொடியிடை துவளப் படிமிசை நடந்து
கார்க்கட விறைக்குக் கையுறை வழங்க
முசுக்கலைக் கொளுங்கி முகிற்குல மெழுந்து
கறையடிச் சிறுகட் கடாக்களிற் றினத்தொடு
வேற்காத் தாசர் போர்க்களத் தெய்திக்

---

17. அம்மனை—தாய்; என்றது அம்பிகையை. 16–7. மாங்கனிக்குப் பொன் அம்மனை உவமை. 18–9. புன்னையரும்புக்கு அடிசில் உவமை; அடிசில்—சோறு. 1-19. இவற்றிற் கூறப்பட்ட பொருள்கள் கையுறை. 20. மருதவேந்தன்—இந்திரன்.

22-முதல் 30-வரையில் வையையாற்றின் வருணனை.

22. சந்து—சந்தனமரம். கராசலக்கோடு—யானைக் கொம்பு. 23. காள்—கருமை; காளமென்பதன் சிதைவு. குறடு—கட்டை. கோள்—கொலை. 24. ஒள்ளொளி—மிக்க ஒளி. 25. தும்பி—ஆண்யானை. 26. அலையாகிய கவரியும். 27. புனலாகிய துகில். சைவலம்—கொடிப்பாசி. 28. கயலாகிய விழி. முத்தாகிய பல். 29. சுழியாகிய உந்தி. குமிழியாகிய கொங்கை. 31. கொடியிடை—கொடியாகியஇடை; கொடிகள் நடுவிலே யெனவும் ஆம். 32. கார்க்கடவிறைக்கு—வருணதேவனுக்கு. 33. முசுக்கலை—ஆண்குரங்கு.

[1]கடிப்பிகு முரசொடு மிடிக்குரன் முழக்க
மகரவெண் டுகிற்கொடி வான்முகட் டகட்டுக்
கங்கை யாற்றிற் கயலெனப் புரள
அந்நதிப் புறத்தில் விண்ணவர் கடக்கும்
நாவாய்க் குலத்தைப் பாரெனத் தாக்கிக்
குரூஉச்சுடர்ப் பருமணி குயிற்றுபொன் மேடைச்
சிகரக் குன்றொடு செய்குன் று திகழப்
பொருவருஞ் சீரிற் றிருவொடு வளர்ந்த
பொன்மதிற் கூடலிற் புகழொடு வளர்ந்தோய்
நிறைபெறக் [2]கொடுத்துங் குறைபெறாச் செல்வ
மன்னுயி ரருந்த வற்றா வருட்கடல்
அறப்பயிர் காக்குந் திறப்போ ரேறு
மும்மூலக் கொடிபட ரைம்முகக் குன்றம்
அறுசுவை யழிக்கு நான்மறைக் கிழங்கு
மறிகட லழைத்த மாறாப் பொன்மழை
காய்விடங் குடித்துக் கனிந்ததெள் ளமுதம்
இனிப்பன வினியார்க் கினிக்குந் தீங்கனி
முக்கட் கடவுள் சொக்கநா யகநின்
பொன்னடிக் கமலப் புதுநற வருந்தி
நீங்கருங் களிப்பொடு தாங்கரு மின்பம்
எம்மையாள் கயல்விழி யம்மைநுண் மருங்குலும்
அடர்தன பாரமும் புரையக்
கடையனே னெய்தக் கருணைவைத் தருளே. (௧0)

---

36. கடிப்பிகும்-குறுந்தடியால் அடிக்கப்பட்ட; இகுத்தல்-அடித்தல்; "முரசுகடிப் பிகுப்பவும்" (புறநா. 158.) 37. மகர வெண்டுகிற் கொடி-மீனக்கொடி; அது பாண்டியர்க்குரியதாதலின் ஈண்டுக் கூறப்பட்டது. 37-8. கொடி புரள. 40. பார்-வல்லிலம்; அது கப்பலை உடைப்பதன்று 40-42. தாக்கித் திகழ. செய்குன்று-கட்டுமலை. 50. கடல்-எழுகடல். பொன் மழை-பொன்னைச் சொரியும் மேகம். 55-8. நூலாசிரியர்க்கு மருங்குலும், தாங் கருங் களிப்பிற்கும் இன்பத்திற்கும் அம்மருங்குலால் தாங்கற்கரிய தனபாரமும் உவமை.

[பி-ம்.] [1]கடிப்பிடுமுரசு. [2]கொடுத்துக் குறைபெறாச்.

### வெண்பா.

கக. கருணையந்தே னூறுங் கடம்பவனத் தெந்தை
அருணயந்தே னல்லேனு மானேன்—மாணத்
திருக்கூ டலைமதியேன் செம்பொனெயில் சூழ்ந்த
திருக்கூ டலைமதியேன் சென்று. (கக)

### கலித்துறை.

கஉ. சென்றேன மின்னமுந் தேடும் பிரான்றிருத் தாள்சுமந்து
நின்றேன் கவலை வெயிலாற் சடப்ப நிழலடைந்தேன்
என்றே னெடுத்த சடம்விழும் போதைக் கிடர்செயுங்கூற்
றென்றேன் பலவெனி லேனெனக் கேன்பிறப் போடிறப்பே. (கஉ)

### அகவல்.

கங. இறவாத் தன்மைத் துறவோர் வேண்டப்
பிறவாது வந்து பிறந்தவர்க் களித்துப்
பல்லுயிர் காக்கு மெல்லையில் பொருள்
பொதுவிய லகற்றிச் சிறப்பியல் விரும்பி
அமுதநா டிருக்க வாலவா யுகந்து
மட்டவிழ் கொன்றையை விட்டுவேம் பணிந்து
விடைக்கொடி கிடக்கக் கயற்கொடி யெடுத்துத்
திருமுக மைந்து மொருமுக மாகி

---

கக. வனம் என்றதற் கேற்பத் தேனூறு மென்றார். திருக்கு டலை அலை மதியேன்-மயக்கத்தில் அலைகின்ற புத்தியை யுடைய யான். திருகூடலை சென்று மதியேன்; கூடல்-மதுரை. மதியேனாதலால் அல்லேனுமானேன் என்க. நயந்தும் முயன்றேனில்லை யென்றபடி.

கஉ. ஏனம்-ஆதிவராகம். தேடும் தாள். ஒன்று என்-ஒன்றாக இருந்தா லென்ன. பலவெனில் ஏன்-பல வடிவாக வந்தாலு மென்னதுன்பம் உளது. என்-இல்லை என்றபடி.

கங. 1. துறவோர்-ஞானிகள்; ஜீவன்முக்தர்கள். பிறவாது வந்து-சுந்தர பாண்டியராக வந்து. பிறந்தவர்-மனிதர்கள். 4. சிறப்பிய லென்றது பாண்டி நாட்டைமட்டும் பாதுகாத்தற்குவந்ததுபற்றி. 5. அமுத நாடிருக்க ஆலவா யுகந்து என்பது முரண்.

இமையா முக்கணு மிருகணி விமைப்ப
எண்டோட் குவடு மிருதோட் குவடுறக்
கஞ்சனும் விசும்புங் காணு முடியும்
அரியொடு பாதல மறியாப் பாதமும்
கைபுனை வினையருங் கதிர்மா மகுடமும்
திருப்பா துகையுஞ் செறுநருங் காண
நான்மறைக் கொளித்து முத்தமிழ்க் கிரங்கி
விண்ணவர் தெய்வ மண்ணவர்க் கிறையாய்ப்
பரவடி விகந்து நரவடி வெய்தி
முயலாத் தகைமை முயற்சியிற் பயின்று
பூழியர் குலத்து வாழிவந் துதித்துக்
கொய்யுளைப் புரவியுங் கைம்மதா சலமும்
ஒற்றை யாழியுங் கொற்றவெண் குடையும்
திருவொடு தாங்கிப் பொருவிறல் விளங்கத்
தென்கூ டலிலமர் தெய்வக் கோமகன்
செய்யசெந் தமிழறி வையையந் துறையும்
தென்றற் குழவியு மன்றற் சாந்தமும்

---

4–9. "கடுக்கைமலர் மாற்றி வேப்பலர் சூடி, மையவாய்க் காப்புவிட் டணிபூ ணணிந்து, விரிசடை மறைத்து மணிமுடி கவித்து, விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி யெடுத்து, வழுதி யாகி முழுதுல களிக்கும், பேரரு ளுடையன்" (கல். 2:9–14); "சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்து நறுங்கொன்றையந்தார் தணந்து வேப்பந், தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி, விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு மகனாகி மீன நோக்கின், மடவாலை மணந்துலக முழுதாண்ட சுந்தரனை வணக்கஞ் செய்வாம்" (திருவிளை. கடவுள்.) 13–6. கைபுனை வினையர்—அலங்கரிப்போர். 14. செறுநர்—பகைமன்னர். 16. தெய்வமாகிய தாம். 19. பூழியர்—பாண்டியர். வாழி: அசைநிலை. 21. ஒற்றையாழி—ஆஞ்ஞாசக்கரம். கொற்றம்—அரசவுரிமை. 24. சம்பந்தமூர்த்தியின் திருப்பாசுரம் வரைந்த ஏடு எதிரேறிச் செல்லுதற் கிடமாயிருந்தமையின் தமிழறி வையை என்றார்; "அனலும் புனலு மியலறியும்" (திருவால. நாட்டு. 3) என்பதன் குறிப்பைப் பார்க்க; "தமிழறிந் துவை திகமுடன் சைவமு நிறுத்தும், அமிழ்த வெண்டிரை வையை" (திருவிளை. நகரப். 17.) 25. தென்றற் குழவி—இளந்தென்றல்; "சிறுகாற் குழந்தாய்" (தென்றல்விடு. 112.) மன்றல்—மணம்.

விரிகட லடக்கிய குறுமுனிக் கடவுளும்
கருணையொடு வழிந்த பொருநைச் செல்வியும்
தலையுற நிமிர்ந்த மலையமால் வரையும்
கங்கைமா நதியுங் கயிலைக் குன்றமும்
பொருவுசீர் தழைத்த பூந்துணர்க் கற்பகம்
கயல்விழிக் கொம்பிற் றுயல்வருந் தீங்கனி
நிருத்த மேற்ற திருத்தாண் முளரியை
எழுதா மறையெனும் பழுதறு நன்மலர்
நூன்முறை சொரியு நான்முகத் தொருவனும்
காங்குவித் தேத்திக் கண்மலர் பறித்திட்
டடியிணை வணங்கு முடியுடைச் செல்வனும்
ஏவல்புரிந் தொழுகுந் தேவர்க ணிற்பக்
கைத்தா மரைகொடு பொற்று மரையெடுத்
தருச்சனை புரிந்து பொருப்பொடு மிகலும்
இந்திர விமானந் தந்தருள் வேந்தனும்
வருத்த நோக்கித் திருத்தாண் மாறி
ஆடெனச் சொன்ன வருளுடைக் கோவும்
திருப்பெய ரொன்றுற் சேயிழை தடுப்ப
இளமை நீத்த வளமைத் தொண்டனும்

---

27. பொருநை-தாமிரபர்ணி. 28. மலையமால்வரை-பொதியின்மலை. 25-8. தென்றற்குழவி முதலியன பொதியிலுக்கு அடை; "கும்பத் துதிக்குங் குறுமுனியுமம்பிற்போய், நந்தமிழுந் தண்பொருநை நன்னதியுஞ் சேர்பொருப்பிற், செந்தமிழின் பின்னுதித்த தென்றலே." (**தென்றல்விடு. 3-4.**). 24-30. வையைத் துறைக்குக் கங்கையும் பொதியிலுக்குக் கயிலையும் உவமைகள். 31, கயல்விழிக்கொம்பு-மீனாட்சியம்மை. துயல்வரும்-அசையும். தீங்கனி-சொக்கநாதர். 32, நிருத்தம்-நடனம்; "நிருத்தம் பயின்றவன் சிற்றம் பலத்துநெற் றித்தனிக்கண், ஒருத்தன்" **திருச்சிற். 62.**

**33-முதல் 48-வரை திருவடியை வேண்டுதற்குரிய பழவடியார் கூறப் படுகின்றனர்.**

33. வேதமாகிய மலர்களை. 36. செல்வன்-திருமால். 40. வேந்தன்-இந்திரன்; "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (**தொல். அகத். சூ. 5.**) 42. கோ-இராசசேகர பாண்டியன். 43. திருப்பெயரொன்றென்றது திருநீலகண்டமென்பதனை. 44. தொண்டன்-திருநீலகண்டநாயனார்.

கொள்ளைத் துயர்தீர் பிள்ளையைச் சமைத்துச்
சுவையமு தூட்டு நவையறு மன்பனும்
வஞ்சனை விளக்கு மலர்விழிக் குருகிக்
கண்ணிடந் தப்பு மண்ணலு மொழிய
அஞ்செழுத் தோரு தெஞ்சிய நாவும்
வெண்ணீ றணியாப் புண்ணா றுடலமும்
கூடலைக் காணாப் பாடுறு கண்களும்
மூவர்சொற் கேளாத் தாவுறு செவியும்
பணியா நாளைப் பிணிநா [1]ளெனவுயிர்
அழிந்துநெட் டுயிர்ப்ப தறியா நாசியும்
பொன்னெயி லெடுத்த மன்னிருங் கோயில்
சூழாத் தாளுந் தாழாச் சென்னியும்
குவியாக் கரமு மலராச் சிந்தையும்
தினந்தின மேம்பட நாடொறுங் கடைப்படு
மாணாச் சிறுமையிற் பெரிய
வீண னேனும் வேண்டுதல் வழக்கே. (௧௩)

### வெண்பா.

௧௪. வேண்டுதலை மாமதுரை வித்தகர்க்கேற் றும்மனமே
ஆண்டுதலைப் போவ தறியாமற்—பூண்டுபொருள்
வேட்டுமுயல் வாய்மதிவெங் கூற்றினுக்கு நீயரா
வாட்டு முயல்வாய் மதி. (௧௪)

---

48. அண்ணல்-கண்ணப்பர்.

**49–60. நூலாசிரியர் தமது சிறுமையைக் கூறுகின்றார்.**

49. எஞ்சிய-குறைந்த. 51. பாடு-படுதல்; நித்திரை. 52. மூவர்-ஞானசம்பந்தர் முதலியோர்கள். சொல்-தேவாரம். தா-கேடு. 60. வழக்கே-வழக்காகுமா? "இகழ்தல் வழக்கே" இ. கோ. சூ. 6.

மூளரியை (32) வேண்டுதல் (60) என்று கூட்டுக.

௧௪. வேண்டுதலை-விரும்புதலை. தலைப்போவது-செல்லுதல். மதி-அடிக்கின்ற. அரா வாட்டு மதி; முயல்வாய் மதி.

[பி-ம்.] [1]எனவுயிர்த் தழிந்து.

## கலித்துறை.

கரு. மதித்தீ ரிலைகொலென் வாட்டந் தழன்மதி யீட்டங்கண்டும்
கொதித்தீ ரிலையன்னை மீருமைப் போலவுங் கூற்றமுண்டோ
நதித்தீரஞ் சூழுங் கடம்பா டவிச்சொக்க நாதர்க்கன்பு
பதித்தீ ரிலையுங்கள் பாடுந் துயரமும் பார்த்திடவே. (கரு)

## அகவல்.

கசு. பாரா வாரப் பேரொலிப் போர்வேல்
சினத்தொடு துளைக்கச் செவித்துணை கொடுத்துச்
சந்தொடு பிறந்த மந்தா நிலமெனும்
ஐவாய்ப் புலியை மெய்யுறத் தழுவி
வெண்பிறை யிறைக்குஞ் செந்தீக் குழம்பை
அள்ளிக் குழப்பி யணிமுலைக் கணிந்து
கொலைக்கரும் பெடுத்த கூற்றொடு மெதிர்த்துக்
கங்குல் யானையின் சங்கிலி பிடித்து
வரிச்சிறைக் குயிலின் வாய்விடங் குடித்துக்
குறையாத் துயரு நிறையாச் சிந்தையும்
அழியாக் காமமு மழிந்தபே ரறிவும்
சிறியேன் சுமந்து பெரியோர்ப் பகைத்துத்
தள்ளருங் காதல் வெள்ளத்திற் படிந்து
கனதனக் குன்றிற் கண்மழை யருவி
ஆரமுஞ் சந்து மகிலும் வாரப்

---

கரு. ஈட்டம்-ஈண்டுதல். நதித்தீரம்-வையைக்கரை. பாடும்-கஷ்டமும். பார்த்திட-பார்த்து நீக்க. தம் துயரத்தை அவர்கள்மேல் ஏற்றிக் கூறினர். இது தலைவிகூற்று.

**கசு. பாங்கி மேகத்தைத் தூதுவிடுதல்.**

1. பாராவாரம்-கடல். ஒலியாகிய வேல். 3. சந்து-சந்தனம். சந்தனமும் தென்றலும் பொதியிலிற் பிறந்தவை. 4. ஐவாய்ப்புலி-சிங்கம்; பஞ்சாననம் என்னும் பெயரை நினைந்து கூறினர்போலும்; சிங்கத்தை வயப்புலியென்பர்; திவாகரம், 3:1. 5. செந்தீக் குழம்பென்றது நிலாவை. 7. கூற்று-மன்மதன். 8. இரவு மன்மதனுக்கு யானை. இரவோடு போராடி என்பது கருத்து. 9. குயிலோசையாகிய விடத்தை. 12. பெரியோர்-செவிலித்தாயர் முதலியோர். 15. ஆரம்-முத்து. சந்தும் அகிலும்-சந்தனக்குழம்பையும் அகிற்குழம்பையும். மலையருவி முத்து சந்தனம் அகில் முதலியவற்றை வாரிச்செல்லுதல் இயல்பு.

புதுமலர்க் கொன்றை யிதுவெனப் பொன்பூத்
தொருவே ளைங்கணை யுருவுசெங் குருதிக்
குன்றுத் தோன்றியுங் கோபமும் படர
நிறையுங் கன்றுங் கலையுஞ் சோர்தரக்
கதுப்புங் கொள்கையு முடிக்கமுடி யாமே
புண்படு விழிப்பே கண்படை யாகத்
தனியே துணையாத் தளர்வெனும் வலியோ
டாயிழை யொருத்தி யாவியோ டிருந்தமை
அகல்வான் பரந்து விரிகடல் குறுகி
வெண்டிரை குடித்துக் கருஞ்சூற் கொண்டு
பானிற மொழித்த பச்சிளம் புயல்காள்
அம்புய வரிவளை யாவியு மனமும்
கண்களி னிறைந்த காவிரித் துறையும்
வையைத் துறையுஞ் செய்யசெந் தமிழ்தேர்
கூடலு முடைய கோமான் சிறுமான்
ஏந்திய பெருமா னெம்மான் றனக்குப்
பரிவொடு விரைந்துசென் றோடி
வரையா துரைத்து வருவீ ரின்றே. (கசு)

16. கொன்றை கார்காலத்தில் மலர்வது. பொன்-பசலை. 17–8. உருவு செங்குருதி-உருவுதலாலுண்டாகிய இரத்தம். குருதியாகிய தோன்றியுங் கோபமும்; கோபம்-இந்திரகோபம். இவையுங் கார்காலத்துக்கு உரியன. 19. நிறை-மனத்தை நிறுத்தற் றன்மை. கன்று-வளையல். கலை-ஆடை. 14–9. "உண்ணிறை யுயிர்ப்பெனு மூதை யூர்தரக், கண்ணீர்ப் பெருமழை பொழிதலி னெண்ணிறத், தஞ்சனக் கொழுஞ்சே றலம்பி யெஞ்சா, மணியும் பொன்னு மாசறு வயிரமும், அணிகிள ரகிலு மாரமு முரிஞ்சிக், கொங்கை யென்னுங் குவட்டிடை யிழிதர" (திருவாரூர் மும். 1.) 20. கதுப்பு-கூந்தல். முடிக்க:சிலேடை. 22. தனியே துணையா: "தானுந் தனியுமா யிருந்துட றளர்ந் தான்" (நைடதம். அன்னத்தைத்தூது. 36.) 27. அம்புய வரிவளை-தாமரை போன்ற கையில் வரியையுடைய வளையையணிந்த தலைவியினது. ஆவி-உயிர். 28. கா விரித்து உறையும் வையை; கா-சோலையை. 30. கூடல்-மதுரை. 27–30. ஆவியும் மனமும் வையைத்துறையும் கூடலுமுடைய கோமான். 30–31. "பெம்மா னமரர் பெருமானம் மான்கோமான், எம்மானம் மானையுனக் கீயுமோ", (தேவையுலா, 191.) 33. வரையாது-நான் சொல்வதை விலக்காமல்.

## வெண்பா.

கள. இன்றா கிலுமறிவீ ரேழைகா ளீசனருள்
குன்றாத நான்மாடக் கூடலுக்குட்—சென்றால்
துறக்கத் தசையானீர் சும்மா நமன்பென் (கள)
றிறக்கத் தசையானீ ரே.

## கலித்துறை.

கஅ. ஏழா யுனக்கினி யின்னமுண் டோதெய்வ மேவருக்கும்
ஊழாய் வெருண்டநஞ் சுண்டானு முற்பத்தி யுந்திதியும்
பாழாய் விடச்சங் கரிப்பானுங் கூடற் பரமனென்றால்
வீழா யவனடிக் கேநெஞ்ச மேதஞ்சம் வேறில்லையே. (கஅ)

## அகவல்.

ககூ. வேறுவே றுருவ மாறா தெடுக்கும்
ஊழொடு மனந்த யோனியிற் புகுந்து
கருக்குழி நரகப் பெருக்கிற் கிடந்து
பின்னே ருடலெனும் வெந்நர கடுத்துப்
பொருள்கவர் மாத ரிருமனம் போலத்
திருக்கொடு பிணைந்து நெருக்கு மாலையிற்
றீதுற நெருக்கிக் கோதெனத் தள்ளும்
பிறவித் துன்பத் துறுதுயர் தொலைத்துத்
தூராச் சலதி தூரினுந் தூராப்
படுகுழி யுதரத் தடுவினைக் காட்டத்

---

**கள.** சென்றால் அருளை அறிவீர். துறக்கத்து அசையால்-சுவர்க்கலோகத்திலுள்ள ஆசையால்; அசைபால்: குறுக்கும்வழிக் குறுக்கல். இறக்க-உள்ளே இறக்க. தசை-இறைச்சி. ஆனீரே:விளி. சென்றால் துறக்கத்தசையினின்றும் நீங்கீரென்பதும் ஒரு பொருள். துறக்கம்-சிவலோகம்; தசை-நிலை; ஆனீர்-நீங்கீர்.

**கஅ.** ஏழாய்-அறிவிலியே. ஊழாய்-முடிவைச் செய்வதாய். திதி-காத்தல்.

**ககூ.** 3. கருக்குழியாகிய நரகப்பெருக்கு. 4. உடலாகிய நரகம்; 'அழுந்தே னரகத்து' (திருச்சிற். 166, பேர். உரை பார்க்க.) 5. மாதர்-வேசையர்; "இருமனப்பெண்டிரும்" (குறள். 920.) 9. சலதி-கடல். 10. காட்டம்-விறகு.

தாசைக் காற்றிற் றேசுற வெழுந்து
மேன்மைப் பஞ்சையு மானச் சருகையும்
கடிதிற் காயுங் காய்பசித் தீயை
எய்யாப் பொழுதெனு நெய்யால் வளர்த்துப்
பிரித்திட லரிதாய்ப் பிறப்பிறப் பொன்றாய்
அற்ற நோக்கி யவ்வயிற் பாக்கும்
வெயிற்றே யிருளென மெய்யிற் காந்தங்
குயிரீர் வனவா முறுபிணிக் குரித்தாய்த்
தெறுகலிப் புலியுஞ் செல்வப் பேயும்
உறுபகைச் சுறவு மொழியாக் காமமும்
போர்வாள் போலரிந் தீர்வா ளெனவீர்ந்
தாம்போ லாவி யழித்தா றலைப்ப
ஈற்றுக் காலக் கூற்றுவன் விடுத்த
தூதெனக் குறுகிக் காதலுங் களிப்பும்
வன்மையும் வனப்புந் தன்மையு மொளித்து
நரையுந் திரையு நரம்புங் காட்டிக்
காலுங் கோலாக் கண்களுங் கையா
அம்மியுங் கறையுந் தம்மெயி றாக்கும்
மூப்பிற் றிளைத்து நீப்பருந் துயர்தரும்

---

12—3. "மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை, தானந்தவ முயர்ச்சி தாளாண்மை—தேனின், கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும், பசிவந் திடப்போம் பறந்து" (நல்வழி, 26.) 14. எய்யா-குறையாத. 17–8. "மேலைநா ளுயிரொடும் பிறந்து தான்விளை, காலமோர்ந் துடனுறை கடிய நோயனுள்" (கம்ப. சூர்ப்ப. 8); "உடன்பிறந்தே கொல்லும் வியாதி" (மூதுரை, 20.) 19. கலி-வறுமை; கலிப்புலி: "மெய்யா வறுமைப் புலிதான் மிகவும் வெருட்டுகின்ற தையா" (சங்கர சிந்தாமணிப்புலவர் பாடல்.) 21. ஈர்வாள்-வாளரம் (ரம்பம்.) 23. ஈற்றுக் காலம்-முடிவுகாலத்தில்வரும். 25. ஒளித்து-மறையச் செய்து. 27. காலுங் கோலா: "தளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி" (சிலப்.15;44, அடியார்.); "முக்காலுக் கேகாமுன்" (காளமேகக் கவிஞர்பாடல்). கண்களும் கையா: கைகளால் தடவும் நிலையைக் குறிப்பிட்டபடி; "கைத்தலங் கண்ணா" (நன்னூல் சூ. 68, மேற்.) 28. கறை-உரல்; உண்ணப் படுவனவற்றுள், கடிக்கப்படுவனவற்றை அம்மியிலும் உரலிலும் பொடிசெய்துண்பதைக் கருதியது.

24–9. குறுகி, ஒளித்து, காட்டி, ஆக்கும் மூப்பு என இயைக்க.

[1]குறிகளு மாணக் குறுமுனை யரும்ப
உழுந்தருள் போழ்திற் கழிந்திடு மின்பம்
நெடுநாட் கழியா [2]நிரயத் தெய்திப்
பெரும்புழு வாகிச் சிறுபுழு வரிப்ப
ஊறுசெய் துடற்றிக் கூறிடு முடலம்
கழிந்திடு நாளைக் கடன்மீன் போல
உப்பிற் குளித்துத் [3]துப்பின் றூணெனக்
குருதியிற் றோய்ந்து பருதியிற் கிடந்து
நீலத் தூணைப் போலவுங் கன்றி
நெருப்பெரிந் தொழுகு மிருப்புத் தூணை
மனம்போன் மாதர் தனம்போற் றழுவி
இனையன பலவா மியாதனை யகற்றி
உள்ளுறு காலையிற் றள்ளிய காமமும்
சிறக்கும் போழ்திற் றுறக்குஞ் செல்வமும்
பசியிற் பொருந்தப் பொசியா வூணும்
இவ்வயிற் புணரா தவ்வயிற் புணர்ந்து
தானவர்க் கஞ்சும் வானவ ராகிக்
கண்படை யொழியக் கனவொழிந் தவர்போற்

---

31. உழுந்தருள் போழ்தின்: "உழுந்து பேருமுன் றிசைதிரிந் திறப்பல்" (கம்ப. வாலிவதை. 61); "உழுந்துருளு மெல்லைதனில்" (வி—பா. அருச்சுனன் றவநிலை. 106); "ஆடி யுழுந்தருள் போதில்" (சோநபானந்தர் நான்மணி மாலை, 29); "உழுந்துருள் பொழுதின் மீள்வேன்" (சீகாளத்தி. கண்ணப்ப. 105.) இன்பம் கழிந்திடும். 32. நிரயம்-நரகம்.

33–41 வரையில் நரகவேதனை கூறப்படும்.

34. கூறிடும்-துண்டப்படுத்துகின்ற. உடலம்-யாதனு சரீரம். 35. கழிந்திடும்-மிகுகின்ற; நீங்குதலுமாம். 36. துப்பின் றூணென—பவளத்தூணைப் போல. 37. பருதி-சக்கரம்; வெயிலுமாம்.

42–4. இவற்றிற் கூறியவை சுவர்க்க இன்பங்கருதி இவ்வுலகத்தில் ஆற்றிய தவச்செயல்கள்.

45. இவ்வயின்-இவ்வுலகத்தில். அவ்வயின்-சுவர்க்கலோகத்தில். 47. இனிய கனவைக் கண்டவர்கள் கண்கள் விழித்தவுடன் அவ்வின்பத்தைத் துறந்தாற்போல.

[பி-ம்.] [1]குறிகொளு. [2]நிரையத் தேறிப். [3]துப்பிற் றூளெனக்.

புண்ணியம் புலரப் போகமு நீங்கி
இம்பரு நரகமு மும்பரு மொன்றாய்ச்
சுழலுங் கறங்குஞ் சுற்றுந் திரிகையும்
ஓடுஞ் சகடமுங் கேடறச் சுற்றி
எல்லா விடனு மெள்ளா ரிடமாம்
ஒவ்வோ ரிடத்தி லுடம்பெலா மெடுத்துப்
பிறந்திறந் தழியும் பெற்றிமை பற்றி
ஆக்கவுங் காக்கவு மழிக்கவுஞ் சலிக்கும்
மூவருக் காகக் கேவலத் தழுந்திக்
குறிஞ்சித் தேனைக் குறைவறச் சொரிந்து
காஞ்சிரை வளர்த்துக் கனிபருந் துவர்போற்
கணிப்பரு முயற்சியிற் கைதவம் பெருக்கி
இன்னண முழலு மேழைமை போக்கிப்
பாலிற் றோன்றியப் பான்மையை மாற்றுமோர்
பிறப்பிற் [1]றோன்றிய பிறப்பினை யழிக்கும்

48. போகம்—சுவர்க்க இன்பம். 49. இம்பர்-இவ்வுலகம். நரகம்-நரகலோகம். உம்பர்-சுவர்க்கலோகம். 50. கறங்கு-காற்றாடி. திரிகை-மாவரைக்கும் இயந்திரம்; "ஆடுங் கறங்குந் திரிகையும் போல வலைந்தலைந்து" (தாயுமானவர். பாயப்புலி. 56.) 51. சகடம்-வண்டிச் சக்கரம்; ஆகுபெயர். 52–3. எள்ளாரிடமாம் ஒவ்வோரிடத்திலும்-என்னெண்ணும் தானியமிருக்கும் இடந்தோறும். 56. கேவலம்-கேவலாவத்தை. 55–6. "திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகிற் றீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில், ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகி லுண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில், அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகி லளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற், பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே" (திருநா. தே.) 57. குறிஞ்சித் தேன் மிகவுயர்ந்தது. 58. காஞ்சிரை-எட்டிமரம். 59. கணிப்பரு-அளவிடுதற்கரிய. கைதவம்-வஞ்சனை. 60. ஏழைமை-அறியாமையை. 61. பாலில் தோன்றி-பாலில் உண்டாகி. அப்பான்மையை-அந்தப் பாலின் தன்மையை. மோர் மாற்றும். அதுபோல். 62. பிறப்பில் தோன்றிய-பிறப்பெடுத்த ஆன்மாக்கள்; தோன்றிய: வினையாலணையும் பெயர். அழிக்கும்-சிவஞானத்தால் அழிக்கும். 61–2. இடைப்பிறவரல். அழிக்குமென்பதன்பின் ஆதலால் என ஒரு சொல் வருவிக்க.

[பி-ம்.] [1]தோன்றியப் பிறப்பினை

பெருங்கடற் பேறு சிறுதினை யளவினும்
சுருங்கிய முயற்சியி னிரம்புங் கொள்கையின்
கோடுக ணிமிர்ந்த வாடகக் குன்றும்
தெண்டிரைக் கடல்சூ ழண்டச் சுவரும்
பொடிபடு காலையு நெடுவான் சுமக்க
இந்திர னமைத்த சுந்தர விமானமும்
கதிரொளி விரிக்கும் கபாலிநீண் மதிலும்
பொற்றா மரையுஞ் சொற்றமிழ்ச் சங்கமும்
கூடலு முடைய கோமான் றிருவடித்
தாமரைப் போதிற் றேமல ரின்றியும்
தணவாக் காட்டின் மணவாப் பச்சிலை
இளந்தளி ரொன்றி னெவ்வள வேனும்
கிள்ளித் தெறித்துத் தள்ளருங் களிப்பும்
ஞான நாட்டமு மூனமில் யாக்கையும்
விழையாச் சிந்தையு மழியா வீடும்
துறவியிற் புகுந்திடர் கொள்ளா
தறிவிற் பெரியீ ரடைந்திடு மின்னே. (கசு)

---

**63–4.** கடற்பேறு-கடல்போன்ற பயன். தினையளவுமுயற்சியினால் பெருங்கடலளவு பயனும் பெறப்படும் கொள்கையினாலே; "சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப், பெறுமெனிற் றாழ்வரோ தாழார்" (**நீதிநெறி.** 70.) 65. கோடுகள்-சிகரங்கள். ஆடகக்குன்று-மேருமலை. 66. அண்டச்சுவர்- அண்டபித்தி. 69. கபாலி மதில்–இது வெளிமதிலுக் குட்பட்டதென்பர்; "காட லால வாயிலாய் கபாலி நீள்கடிம்மதிற், கூட லால வாயிலாய்" (**தே. திருஞா.**) 73–4. பச்சிலை இளந்தளி ரிவற்றுள் ஒன்றில். 73. "யாவர்க்கு மாமிறை வர்க்கொரு பச்சிலை" (**திருமந்திரமாலை**, 252); "போதும் பெறாவிடிற் பச்சிலை யுண்டு" (**திருக்கழுமலமும்மணி.** 12); "குடங்கை நீரும் பச்சிலையு மிடுவார்க்கு" (**திருவிளை.** 44:34); "கண்ணுண்டு காண......பல் பச்சிலையா லெண்ணுண்டு சாத்த" (**பட்டினத்.**)

களிப்பு (75) முதல் வீடு (77) இறுதியாக உள்ளவற்றை அடைந்திடுமின் (79) என்க.

போக்கி (60) தெறித்து (75) அடைந்திடுமின் (79.)

## வெண்பா.

௨0. அடையலரும் பூவா யணிமதுரைச் சொக்கர்
தொடையலருங் காவெனக்குச் சொல்லாய்—விடைமணியின்
பாரம்பா ராய்வான் பனிமதிபா ராயினிவேள்
போரம்பா ராய்வான் பொர. (௨0)

## கலித்துறை.

௨௧. பொருந்தா ரணிமதி லின்னம் புகைந்து புகைந்தெரிய
வருந்தா ரணியில் வரும்பெரு மான்மது ரைப்பெருமான்
திருந்தா ரணியும் பெருமான் றிருப்பத மேசுதியா
இருந்தா ரணிய ரிமையோர்க்கு மூவர்க்கு மியாவர்க்குமே. (௨௧)

## அகவல்.

௨௨. யாவையும் படைத்த தேவரைப் பணிந்து
நெறிப்படி நோற்றுங் குறித்தமை கொள்ளார்
கடற்பெருஞ் சேனையு மடற்போ ராற்றலும்
அரணொடு மடைந்தோர் மூரணிலர்க் குடைவார்
ஐயந் தீர்ந்து கைவரு மருந்து

---

௨0. அடையல் அரும்பூவாய்—அடைதற்கரிய நாகணவாய்ப் பறவையே. தொடை அலரும் கா—மாலைக்குரிய கொன்றைப்பூமலரும் வனத்தை. விடைமணி—காளைகளின் மணி; இது விரகிகளுக்குத் துன்பமுண்டாக்கும். பாரம்—கனம்; இங்கே மிக்க துன்பம். பாராய்—ஆராய்ந்து பார். வேள்—மன்மதன். போர் அம்பு ஆராய்வான்—போருக்குரிய அம்புகளைத் தெரிந்தெடுப்பான். பொர ஆராய்வான். நீ தூதுசென்றுவா வென்பது கருத்து.

௨௧. பொருந்தார்—பகைவர். மதில் இன்னம் புகைந்து புகைந் தெரிய வென்றது பொருளதிசயவணி; "பண்டு புரமெரித்த தீமேற் படர்ந்தின்றும், அண்ட முகடு நெருப்பறா—தொண்டளிர்க்கை, வல்லி தழுவக் குழைந்த வடமேரு, வில்லி நுதன்மேல் விழி" (தண்டி. சூ. 53, மேற்.) வரும் தாரணியில்—வருகின்ற பூமியாகிய தேரில். திருந்து—திருந்திய. ஆர்—ஆத்திமாலையை. அணியர்—ஆபரணம்போன்றவர்கள். இமையோர் முதலிய யாவருக்கும் அணியர்.

**௨௨. 1-14. திருவருளாலன்றித் தம் முயற்சியினால் ஆவது ஒன்று மில்லை யென்பது கூறப்படும்.**

4. அரண்—மதில், அகழ் முதலியன. மூரணிலர்—வலியில்லார்.

பற்பல வருந்தியு மற்பனோ யகலார்
நெஞ்சாற் கைத்தல நெல்லியிற் கண்ட
அஞ்சனம் பெற்றோ ரரும்பொருள் பெறூஅர்
அவையுறு மகத்தி லவிபெறச் சென்றோர்
ஆற்றலுக் கிசைந்த வவயவ மிழப்பார்
திருப்பாற் கடலிற் பொருப்பினை நாட்டி
அமுதங் கடைந்தோ ராலமங் கடைவார்
ஆதலி னின்னைக் காதலிற் பணியும்
இயல்பொன் றுகிடக்க முயல்வதொன் றறியேன்
அடவியிற் கிடந்து புடவியைக் கிளைத்து
மூக்காற் றேடி நாக்கா லருந்தும்
பன்றிக் குருளைக் கொன்றுத் திருமுலைப்
பாலமு தளித்துப் பாலமு தருந்தி
அரியணைப் புறத்தி லரசனோ டிருந்து
பூண்டபே ரறிவைத் தூண்டுகோ லென்னத்
தந்திர முரைக்கு மந்திரி யாக்கி
நிமிர்தரு புனலிற் றிமிர்தரு பாதமும்
ஊதையிற் சிலிர்த்த மேதகு சிறையும்
தாங்கிக் கயல்பார்த் தேங்கிய நாரைக்
செய்தா முத்தி நொய்திற் கொடுத்துப்
போதார் மதுரை மூதூர்க் கடுத்த

---

8. அஞ்சனம்—புதையலைக் காட்டும் மை. 9. அவை—கூட்டம். மகத்தில்—யாகத்தில்; தக்கன் யாகத்தில். அவி—அவிர்ப்பாகம். 10. அவயவம் இழப்பாரென்றது தக்கன் யாகத்தில் இந்திரன் முதலியோர் தங்கள் தங்கள் உறுப்புக்களை இழந்தமையை நினைந்து. 15. அடவியில்—காட்டில்.

**15-21. இவற்றிற் பன்றிக்குட்டிகளுக்குப் பாலருத்தி மந்திரியாக்கியது முதலிய அருமைத்திருவிளையாடல்கள் கூறப்படுகின்றன.**

15-7. பன்றியின் சாதித்தன்மை. 20. அறிவை—அரசன் அறிவை. 20-22. தூண்டுகோல் மந்திரிக்குவமை. 22-4. நாரையின் சாதித்தன்மை. 22-5. நாரைக்கு முத்தி யளித்த திருவிளையாடல். 23. ஊதை—வாடைக்காற்று. 25. நொய்தின்—எளிதில்.

இனமழை யொழித்து வருமலை யகற்றிக்
குரைகட லேழு மிரையாது வந்து
குண்டிற் கிடக்கப் பண்டழைத் தருளிப்
புரந்தரன் பணியாற் [1]பரந்துறு வேலையை
வேற்றலை குடிக்கு மாற்றலை விளைத்து
மகத்திற் றோன்றிச் [2]சகத்தினை யழிக்கும்
ஈற்றான் பகையை யேற்றாற் போக்கி
எழில்வந் தொழுகிய கயற்கண்
குழல்புரை கடப்ப நிழலிருந் தோயே. (உஉ)

## வெண்பா.

உங. இருபதமு முக்கண்ணு மென்கருத்தே நான்கு
சுருதிமுக மைந்துமென்று தோன்றும்—பொருகருடப்
புள்ளன் படையாப் புரமெரித்த கூடலிறைக்
குள்ளன் புடையா வுனக்கு. (உங)

## கலித்துறை.

உச. உனக்கன்று காண்மட நெஞ்சே கனிந்துநெக் குள்ளுருகி
மனக்கன்று வாட்டமுங் கண்ணீரு மாக வணங்கினர்க்கே

---

27. இனமழையொழித்தது நான்மாடக்கூடலான திருவிளையாடலால் உணரப்படும், அலை—சமுத்திரம்; வருணன்விட்ட கடலை வற்றச்செய்தது. வரும் மலை யெனப்பிரித்துச் சமணர்கள்விட்ட யானை யென்று பொருள் கொள்ளலுமாம். 29. குண்டு—பள்ளமான தீர்த்தம். 30–31. இது வருணன் செய்ததாயினும் தலைமைபற்றி இந்திரன்மேலேற்றப்பட்டது. 32, மகம்—சமணர் செய்த யாகம். 33. ஈற்று ஆன்—கன்றையுடைய பசு; சாதியடை, ஏறு—ரிஷபதேவர். 34. கயற்கண்—அங்கயற்கண்ணம்மை. 35, கூந்தலுக்கு கடப்ப மரம் உவமை.

உங. கருத்தே: விளி. இருபதமுதலியன என்று தோன்றும்? நான்கு சுருதியை அருளிச்செய்த ஐந்து முகம், கருடப்புள்ளன்—திருமால். படையா—அம்பாக. கூடலிறைக்கு—சொக்கநாதருக்கு, உள்ளன்பு அடையா உனக்கு என்று தோன்று மென்று முடிக்க.

உச. அன்று—கிடைத்தற்குரியனவல்ல. மடநெஞ்சே; மடம்—அறியாமை. மனவாட்டம்; கன்றுவாட்டம்; கன்றுதல்—தழும்புறுதல். வணங்கினர்க்கே உரியனவாகுமென ஒரு சொல் வருவிக்க.

[பி-ம்.] [1]பரந்திடு காலையில். [2]சகத்தினை யனுக்கும்.

சினக்கன் று மானவர் பொற்றாளுஞ் சீவன்முத் தித்தலமும்
கனக்கன் று தாங்கும் கயற்கட் பிராட்டி கடாட்சமுமே. (உச)

அகவல்.

உரு. கடைபடுந் தமியேன் கடைபடு மத்தும்
வேவாய்க் குகையிற் றீவாய் மெழுகும்
பிறங்குநீர்க் கேணிக் கறங்கலை மதியும்
தாமரைப் பாசடைக் காமரு புனலும்
ஊற்றிற் கிடந்த சேற்றுத் தூணும்
மேம்படக் கீழ்ப்படா மெலியா வறிவால்
நின்னது வடிவுந் தன்மையுங் கண்டு
சிறப்பொடு நின்று பிறப்பிறப் பொழிய
அந்தெனத் தோன்றி யறக்கடல் குடித்துத்
தந்தி யாகித் தவச்சேண் பறந்து
சிற்றெறும் பாகிப் பத்திவெற் பெடுத்துக்
குறுங்கைப் பால நெடுங்கட லேழையும்
நீந்துவான் குறுகித் தோய்ந்திடு மாபோற்
கொம்பற வுழுதலுஞ் சிறையறப் பறந்தும்
இம்பரு மும்பரு மிருவருந் திரிய
யானுந் திரிந்தமை யியல்புடைத் தன்றால்

---

சினத்தையுடைய மான்கன்றை ஏந்தினவர். சீவன்முத்தித்தலம்—மதுரை; "சிவராச தானியாய்ச் சீவன்முத் தித்தலமுமாய்" (மீனாட்சி. பிள்ளைத். அம்புலிப். 6.) கன்று—வளையல். கடாட்சம்—கடைக்கட்பார்வை. பொற்றாள் முதலியன உனக்கன்று என்க.

உரு. 3. கறங்கு—சுழலுகின்ற. 4. தாமரையிலையிலுள்ள நீர். 6. கீழ்ப்படிதலில் மெலியாத; "மூடரை யெண்ணுங்கால் மூந்தி நிற்பரே" (பிரபு. மாயை கோலா. 10) என்றதுபோல. 9. அந்து—ஒருவகைப்பூச்சி; "அந்து தும்பிவண் டாதி நாலவைந், திந்தி யம்பசு நரகர் தேவர்" (மேருமந்தா. வச்சிராயுதனுத்தரம். 11.) 14. கொம்பற உழுதல் ஆதிவராகத்தின் செயல்; "ஊழியா ழிக்க ணிருநில முருகெழு, கேழலாய் மருப்பி னுழுதோ யெனவும்" (பரி. 3: 23-4.) சிறையறப் பறத்தல் பிரமாவின் செயல். 15. இம்பர்—இவ்வுலகில். உம்பர்—ஆகாயத்தில். இருவர்—திருமாலும் பிரமனும்.

தோய்ந்திடுமாபோல் (13) திரிந்தமை இயல்புடைத்தன்றால் (16) என்க.

விரும்பினர்க் கின்பந் தரும்பூ லோகத்
திதுசிவ லோகமு மெய்தாத் துவாத
சாந்தமுஞ் சீவன் முத்தியுந் தோய்ந்த
சுதையாற் கிளைத்த மதுரா புரியும்
ஆதலிற் பெறுதற் கரிதெனத் தேவர்
மணிப்பல திரடேண் மண்டபத் தெழுதிய
ஓவியத் தேவ ருடனினி திருக்கும்
ஆலவா யமுதங் காலன் கூற்று
வில்வேண் மறலி கல்விச் சொன்மலை
முருகனைப் பயந்த வொருதனிக் கடவுள்
மழைக்கடத் தருவிப் புழைக்கைக் கன்று
தவளநீ றும்பும் பவளக் குன்று
துன்றிள மதியிருள் கிழிக்கும்
குன்றுக் கயிலைக் குன்றத் தோனே. (உரு)

### வெண்பா.

உசு. குன்றுபோற் கோபுரஞ்சூழ் கூடற் குருமணியை
இன்றுபோய்க் [1]காணுங்கா ணேழையீர்—பொன்றுங்காற்
கையுங் கதையுமாய்க் காலனும்முன் னேவருதல்
பொய்யுங் கதையுமாய்ப் போம். (உசு)

---

18–20. சிவலோகமும்............மதுராபுரி: "அத்திருமா நகரின்பேர் சிவநகரங் கடம்பவன மமர்ந்த சீவன், முத்திபுரங் கன்னிபுரந் திருவால வாய் மதுரை முடியா ஞானம், புத்திதரும் பூவுலகிற் சிவலோகஞ் சமட்டிவிச்சா புரந்தென் கூடல், பத்திதரு துவாதசாந் தத்தலமென் றேதுவினாற் பகர்வர் நல்லோர்" (திருவிளை. தலவிசேட. 21.) சுதை–சந்திரனிடத்துள்ள அமுதம். கிளைத்த–வளர்ந்த. 25. கல்விச் சொன்மலை; "அறிந்தோர் சொன்மலை" (முருகு. 263.) 27. கன்று–விநாயகக் கடவுள். 27–8. "எங்கோன், போர் கொண்ட வெண்டோட் பொலன்குவடு பொதியும்வெண் பொடிதுடி யடித்து வைத்துப் புழுதியாட் டயராவொ ரயிரா வணத்துலவு போர்க்களிற் றைத்துதிப் பாம்" (மீனாட்சி. பிள்ளை. 1.) தவளநீறு–சிவபெருமான் திருமேனியிலுள்ள நீறு.

உசு. காண்: அசை. கதை–பொய்யாகக் கட்டிய வரலாறு; "கதை யெனக் கருதல் செய்யான் மெய்யெனத் தானுங் கொண்டான்" சீவக. 2144.

[பி-ம்.] [1]கண்டாலும்

### கலித்துறை.

உஎ. போம்போது சுட்டுப் பொடியாக் கியவெறும் பூழ்திகன்மம்
ஆம்போதெல் லாமுடம் பாகவந் தாற்சுமந் தாற்றுவனே
நாம்போது நீயஞ்ச லென்றே. செனன நாகந்தள்ளித்
தேம்போ தடியிணை நல்காய்தென் கூடலிற் றெள்ளமுதே. (உஎ)

### அகவல்.

உஅ. தெள்ளமு தென்னத் தீவிடங் குடித்துத்
தள்ளருங் கடவுளர் தமக்கருள் கடவுள்
காவணத் துயர்ந்த பூவணப் பாதமும்
கொங்குதே ரேடகப் பங்கய முகமும்
மன்பெருஞ் சீருடைத் தென்பரங் குன்றொடு
சொல்விடை கேட்டுச் செல்விடை வெற்பெனும்
கொங்கையுஞ் சுமந்த கூடற் பூங்கொடி
உள்ளம் போன்ற வெள்ளிமன் றுடைய
கோவே நின்னைப் பாவாற் பாடேன்
வீழேன் சூழேன் றாழே னாயினும்
தந்தையைக் கொன்ற பிள்ளையு மல்லேன்
பிள்ளையைக் கொன்ற தந்தையு மல்லேன்
கல்லா லெறிந்திலன் வில்லா லடித்திலன்
வதைத்திடு மூன்கொடுத் துதைத்திலே னதனிற்
பொல்லே னல்லே னல்லேன் யானே
எனக்கே நின்னரு ளேனையோர்க் [1]கில்லெனா

---

உஎ. நாம் போதும்—நாம் பாதுகாத்தற்கு வருவேம். தேம்போது—தேனை யுடைய தாமரைமலரைப்போன்ற.

உஅ. 1. அமுதத்தை உண்ணுதல்போல.

**3–7. இனி, மதுரை ஒரு பெண்ணாக உருவகிக்கப்படுகின்றது.**

3. பூவணம்—திருப்பூவணமாகிய தலம்; மலரின் அழகென்பது வேறு பொருள். 4. ஏடகப்—ஒரு தலம்; இதழ்களையுடைய இடமென்பது வேறொரு பொருள். 6. விடைவெற்பு—ரிஷபகிரி; சோலைமலை 11. பிள்ளை—சண்டீசர். 12. தந்தை—சிறுத்தொண்டர். 13. சாக்கிய நாயனாரும் அருச்சுனனும் அல்லேன். 14. கண்ணப்பன் அல்லேன். 16. அருள் உரியதென ஒரு சொல் வருவிக்க.

[பி-ம்.] [1]இல்லையெனா

மனத்திற் றேறு மாணாப் பேதைமை
முப்புரம் போல வெப்பெழும் வன்னகை
விளையா தின்னகை விளைத்தலி னந்நகை
வளையா மேருவை வளைத்திடு மாபோல்
என்னையாட் கொண்டு முன்னைத் தீவினைக்
கொல்வாய்ப் புலிமுலை புல்வாய்க் குதவிய
தொல்வினை யென்ன நல்வினை பயப்பப்
புழைக்கை நீட்டிக் கழைக்கரும் பெடுத்துத்
திருந்துகல் லானை யருந்திடு மாறு
வெவ்வினை யேனா மவ்வினைப் பயத்தின்
ஊறுதே னருந்தி யேறுபோற் றிரிதலின்
முந்நூற் சிறுவ னாண்மறைக் கிழவன்
பழுதற நீறு மெழுத்தோ ரஞ்சும்
அல்லாற் கடவு ளில்லையென் றுணர்ந்த
ஞானப் பிள்ளை தானுயிர் நடுங்க
மாற்றருந் துயர்தருங் கொடிய
கூற்றைச் சீறுதல் குறைகழற் குரித்தே. (உஅ)

வெண்பா.

உகூ. உருத்தக்கான் மாய்ந்தங் குயர்ந்தபுகழ்க் கூடல்
ஒருத்த னருளுங்கா லுண்டாய்க்—கருத்தனவன்
காண்பித்துக் காணுமிந்தக் காசினிக்கு நானென்னும்
வீண்பித்துக் காணும் வினை. (உகூ)

---

17. தேறம்—நான் தேறும். 19. விளைத்தலின்—நினக்கு விளைத்தலினால்; என் பேதைமைகண்டு நீ நகைக்கின்றாயென்பது கருத்து. 20–21. "தெவ்வரை மெய்யெரி காய்சிலை யாண்டென்னை யாண்டுகொண்ட, செவ்வரை மேனியன்". (திருச்சிற்.) 21. தீவினை—எனது தீவினை. 23. தொல்வினை—பழைய செயல்'

விதிக்கு மாறாக என்னை யாண்டுகொண்டருளின தன்மையால், பூங்கழலுக்கு, விதித்த விதியை நீக்கிக் கூற்றைச் சீறியது வழக்கேயாகும்.

உகூ. உருத்தக்கால்—கோபித்தால்; என்றது சங்காரகாலத்தைக் குறிப்பித்தது. காண்பித்து—காண்பிக்க. காணும்: முன்னிலைப்பன்மை அசை.

## கலித்துறை.

௩௦. வினையள வாய்நின்று வேறா யருள்வியன் கூடற்பிரான்
தனையள வாதவர் தாழ்வறி யார்தண் டுறைக்கமல
மனையள வானெண்ண வொண்ணாத் திருமுடி வாய்த்ததென்றால்
தினையள வானு முயலாத கூனிளந் திங்களுக்கே. (௩௦)

## மதுரை மும்மணிக்கோவை முற்றுப்பெற்றது.

---

௩௦. அளவிடத்தொடங்கியவர் தாழ்வரென்க: "யாதவ குலத்துநெடு மாதவன் மருப்புடைய வேனமிரு கத்துருவமா, வேதமொழி பெற்றவய ஞேதிம மெனப்பறவை வேடமு மெடுத்ததிலையோ, ஓதருணை வித்தகரை மூவரி லொருத்தரென வோதியிடு மற்ப மதியீர், சீதமதி வைத்தமுடி பாதமல ரைச் சிறிது தேடுதெ னினைத்தபரமே" (அருணைக்கலம். 6.) கமல மனை அளவான்— தாமரையை வீட்டின் எல்லையாகப் பெற்றவன்; பிரமன். தண்டுறை யென்றது, சாதிப்பற்றிய அடை. திங்களுக்கு வாய்த்ததென்றால் அறியார்.